பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 23 வெள்ளிக்கிழமை (08-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:253

# இந்திய மீனவர் 10 பேர் பருத்தித்துறையில் வடமராட்சி மீனவர்களால் பிடிக்கப்பட்டனர்

## நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்; இரு ட்ரோலர் படகுகள் தடுத்துவைப்பு



பிடிக்கப்பட்ட மீனவர்களில் சிலர்

வடமராட்சி,ஓக.8

பருத்தித்துறை முனைக் கடற்கரைப் பகுதியில் இலங்கைக் கடல எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 10 பேரை வடமராட்சி மீனவர்கள் பிடித்து கரைக்குக் கொண்டுவந்துள்ளனர். அவர்களின இரு ட்ரோலர் படகுகளும் கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வடமராட்சி இன்பருட்டிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே இந்திய மீனவர்களைப் பிடித்து வந்தவர்கள் என்று கூறப்பட்டது.

பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை ஒப்படைக்குமாறு கோரி பொலீஸாரும் இராணுவத்தினரும் கேட்டபோதும் வடமராட்சி மீனவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தால், இன்பருட்டி கிராமத்தில் நேற்றுப் பகல்வரை பதற்றம் நிலவியது.

எனினும், சமரசங்களின் பின்னர் நேற்றுப் பகல் 11.00 மணியளவில் இந்திய மீனவர்கள் 10பேரும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இராணுவ, கடற்படை அதிகாரிகள், கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதி ஆகியோர் முன்னிலையில் இந்தக் கையளிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

பிடிபட்ட மீனவர்கள் அனைவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தங்கப்பன் சுப்பிரவேலு (வயது 23), தங்கப்பன் மகேந்திரன் (வயது 33), வயித்தியநாதன் சுரேஸ் (வயது 26), மாணிக்க வேல் சுரேந்திரன் (வயது 18), மாணிக்கவேல் வீரமுரளி (வயது 30), பழனியப்பன் செந்தில் (வயது 22), திருகோணம பாலமுருகன் (வயது 29), திருகோணம் பழனிவேல் (வயது 27), திருகோணம் குமார் (வயது 22), திருகோணம் அமந்தவேல் (வயது 20) ஆகியோரே பிடித்து வரப்பட்டவர்களாவர்.



இந்திய மீனவரின் ட்ரோலர் படகுகள்

இவர்கள் பிடிக்கப்பட்ட சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் இன்பருட்டிப் பகுதி மீனவர்கள் தொழிலுக்காக கடலுக்குச் சென்றுள்ளனர். அங்கு வலைகளை வீசிவிட்டு அவர்கள் (14ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகள்:

# ஆவணக் குழப்பத்துக்கு விளக்கமளித்து ஜனாதிபதிக்கு பிரதமர் ரணில் பதில் கடிதம்

## குற்றச்சாட்டுக்கு மறுப்பு; இரகசியத்தன்மை பேண ஜனாதிபதி தவறிவிட்டார் என்று விசனம் தெரிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்8

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றா அல்லது இரண்டா? ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட ஆவணமும் விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்ட ஆவணமும் ஒரே மாதிரியாக இருக்கவில்லையே! வித்தியாசங்கள் இருந்தனவே! இப்படியெல்லாம் ஜனாதிபதி சுட்டிக்காட்டி பிரதமருக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி கடிதம் எழுதியிருந்தார். அதனால் ஏற்பட்ட குழப்பத்துக்குப் பிரதமர் விளக்கம் அளித்து நேற்று ஜனாதிபதிக்குப் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். அதில் ஜனாதிபதியின் குற்றச்சாட்டைப் பிரதமர் மறுத்திருக்கிறார்.**

தனது கடிதத்தில் பிரதமர் ரணில விக்கிரமசிங்க குறிப்பிட்டிருப்பதாவது:-

ஜூலை 30 ஆம் திகதியிடப்பட்ட தங்களுடைய கடிதம் கிடைத்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளிலிருந்து வேறுபட்டுள்ளன என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அது அவ்வாறில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முன்மொழிவுகள் அடங்கிய ஒரேயொரு ஆவணம் மட்டுமே என்னால் அனுப்பப்பட்டது. அரசாங்கத்தால் அனுசரணையாளருக்குக் கையளிக்கப்பட்டதும் ஜூலை 18 ஆம் திகதி என்னுடைய கடிதத்துடன் தங்களுக்கு அனுபப்பட்டதுமான ஆவணமே அதுவாகும் எவ்விதத்திலும் மாறுபடாத ஒத்த முன்மொழிவு ஆவணமே தங்களுக்கும் அனுசரணையாளருக்கும் அனுப்பப்பட்டது என்பதனை நான் வலியுறுத்துகின்றேன்.

இதற்காகக் கையாளப்பட்ட நடைமுறைகள் அரசாங்கப் பேச்சாளரால் விளக்கப்பட்டுள்ளன. அரசாங்க முன்மொழிவுகள் மற்றும் அதன் உள்ளடக்கம் பற்றி அரசாங்கத்துக்கும் அனுசரணையாளருக்கும் இடையில் நடந்த கலந்துரையாடல்களின்போது அளிக்கப்பட்ட விளக்கங்களையும் உள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை, பெறுபேறுகள் நாளை வெளியாகும்

கொழும்பு,ஓக.8

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நாளை சனிக்கிழமை வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியும் பிரதமரும் நேற்று சந்தித்துப் பேச்சு

### இடைக்கால நிர்வாகம் பற்றி ஆராய்வு

கொழும்பு,ஓக.8

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இடைக்கால யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கும் திருத்தங்கள் குறித்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்படும் என்று இந்தச் சந்திப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை மாவட்டத்தில்

# புலிகளின் இராணுவ முகாம் குறித்து அமெரிக்கா கவலை

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ முகாம் ஒன்றை வைத்திருப்பதன் மூலமும், 'அரசியற் படுகொலைகள்' கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமும் விடுதலைப் புலிகள் சமாதானச் செயல்திட்டத்தின் மீதுள்ள நம்பிக்கையை உதாசீனம் செய்கின்றனர் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் பிலிப் றீக்கர் கவலை தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தைக் கைவிடுமாறும், அரசியல் கொலைகளை நிறுத்துமாறும் அவர் புலிகளைக் கேட்டுள்ளார்.

யுத்தநிறுத்த நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றுச் செயற்பட வேண்டும் என்றும் அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

றீக்கரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB

☐ ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
☐ தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
☐ இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
☐ வருடாந்தம் 17% குறைந்த வட்டி
☐ கணனி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை



வடமராட்சியில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம் வடமராட்சி மீனவர்களால் பிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பாக இராணுவம் மற்றும் கண்காணிப்புக்குழு அதிகாரிகளுடன் மீனவர் சமாசப் பிரதிநிதிகள் கலந்துரையாடுவதையும் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பிரமுகர் சந்தித்து உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்; விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படும்

காரைதீவு,ஓக.8

கல்வி, கலாசார, மனிதவள அமைச்சு 1,750 பட்டதாரிகளை ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளது. இவர்களில் 500 பட்டதாரிகள் தரம் - 6 முதல் தரம் 11 வரையிலான வகுப்புகளில் ஆங்கில மொழி மூலம் பாடங்களைக் கற்பிக்க சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மீதி 1,250 பட்டதாரிகள் தமிழ், சிங்கள மொழிமூலம் கற்பிக்க சகல மாகாணங்களிலும் நியமிக்கப்படுவார்கள். உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை, நடனம், இசை, ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிக்க இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

முதலில் தெரிவாகும் 500 பட்டதாரிகள் ஆங்கில மொழி மூலம் தரம் 6-11 வகுப்புகளில் விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், கணிதம், சுகாதாரம், உடற்கல்வி, சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் கற்பிக்க நியமிக்கப்படுவர்.

சகல விண்ணப்பதாரிகளும் முதலில் பரீட்சைத் திணைக்களத்தின் ஆங்கிலத் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்றவேண்டும். தெரிவாகும் 500 பட்டதாரிகளுக்கு தேசிய கல்வி நிறுவனத்தில் ஆறு மாத வதிவிடப் பயிற்சி வழங்கப்படும்.

இப்புதிய பட்டதாரி ஆசிரியர்களைச சேர்த்துக் கொள்வதற்கான பகிரங்க அறிவித்தல் மிகவிரைவில் வெளியாகும். (ம)

# 8 ஆண்டுகளின் பின் இன்று மீண்டும் அம்பாறைக்கு விமானச் சேவை

கல்முனை,ஓக.8

கிழக்கு மாகாணத்துக்கான உள்ளூர் விமானச் சேவை கடந்த எட்டு வருடங்களுக்குப் பின் இன்று மீண்டும் ஆரம்பமாகின்றது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மயோன் முஸ்தபா, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சிவில் விமானப் போக்குவரத்து, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக கொழும்பிலிருந்து அம்பாறைக்கான 'விமானச்சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இந்த வெள்ளோட்டத்தையடுத்து எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் கொழும்பு - அம்பாறை விமானச் சேவை தினசரி இடம்பெறும் என மயோன் முஸ்தபா எம்.பி. தெரிவித்தார். (ம)

# சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பமாக, கொழும்பிலிருந்து மடுமாதா சொரூப பவனி

## இன்று காலை மருதானையிலிருந்து ஆரம்பம்

கொழும்பு,ஓக.8

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கௌரவமான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தித் தருமாறும் கோரி மடுமாதா திருச்சொரூபத்தைக் கொண்ட 'ஆத்மீக யாத்திரை' இன்று காலை கொழும்பிலிருந்து வன்னிக்கு புறப்படுகிறது.

வத்திக்கானில் ஆசீர்வதிக்கப்பட்ட மடுமாதா திருச் சொரூபமே யாத்திரையில் எடுத்து வரப்படுகின்றது.

அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்திருக்கும் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு, இந்த யாத்திரை எந்த வகையிலும் அரசியல் நோக்கத்தைக்கொண்டதல்ல என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மருதானையில் இருந்து இன்று காலை 8 மணிக்கு இந்த யாத்திரை ஆரம்பமாகும். பொரளை, கொட்டஞ்சேனை, கொச்சிக்கடை, வத்தளை, ராகம, கந்தானை வழியாக ஜா-எல வரை இன்று யாத்திரை செல்லும்.

நாளை 9 ஆம் திகதி ஜா-எல முதல் நீர்கொழும்பு வரையும், 10 ஆம் திகதி நிர்கொழும்பின் சகல ஆலயங்களுக்கும் யாத்திரை செல்லும். 11ஆம் திகதி வைக்கால் முதல் சிலாபம் வரையும், 12ஆம் திகதி முந்தல் முதல் நொச்சியாகம வரையும், 13 ஆம் திகதி நொச்சியாகம முதல் வவுனியா வரையும் யாத்திரை மேற்கொள்ளப்படும்.

14ஆம் திகதி மடுமாதாவின் திருச்சொரூபம், வவுனியாவில் இருந்து பறையனாலங்குளம் சந்திக்கு பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஸ்தாபிக்கப்படும். (ம)

# சீன விஜயத்தை மேற்கொண்டு பிரதமர் ரணில் இன்று பயணம்

கொழும்பு,ஓக.8

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சீனாவுக்கான விஜயத்தை ஆரம்பிக்கின்றார். இன்று முதல் 13 ஆம் திகதி வரை அவர் சீனாவில் உத்தியோகபூர்வப் பேச்சுக்களை நடத்துவார்.

பிரதமர் தனது விஜயத்தின்போது சீன ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் உட்பட பல சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

அரசியல், பொருளாதார, தொழில் முயற்சிகள் தொடர்பான ஆறு ஒப்பந்தங்களிலும் பிரதமர் கைச்சாத்திடவுள்ளார். இவை அனைத்தும் பாங்கொக் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அமையும்.

சீன முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சீனத் தலைநகரில் பிரதமர் வர்த்தக கண்காட்சி ஒன்றையும் அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். (ம)

# 100 நாள்கள் கடந்தும் மாணவி மயூரணி கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை இல்லை

திருகோணமலை,ஓக.8

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் நூறு நாள்கள் கடந்தும் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. போதிய ஆதாரங்களோ, சாட்சியங்களோ இல்லாததாலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இவ்வழக்கில் கைதாகிய இலங்கை மாணவர் சிவகுமார் பாலபிரசன்னா பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அவர் கடந்த 11 ஆம் திகதி முதல் அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கல்வியை ஆரம்பித்திருக்கிறார்.

இந்த வழக்கு சோடிக்கப்பட்ட ஒன்று என்றும் தன்னிடம் வாக்குமூலம் அடித்துப் பெறப்பட்டதாகும் என்றும் உண்மைக் குற்றவாளி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பாலபிரசன்னா தெரிவித்திருக்கிறார்.

இக்கொலை வழக்கு அநேகமாக அடுத்த வருடம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கும் எம்.பிகளுக்கே துப்பாக்கி லைசன்ஸ்

## புதிய திட்டம் குறித்து அமைச்சர் அமரதுங்க

கொழும்பு,ஓக.8

எம்.பிக்களின் பாதுகாப்புக்காக சுழல் துப்பாக்கிகளை வழங்கும் முறை மீளாய்வு செய்யப்படும். எம்.பிக்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் உள்ளதென உறுதிசெய்யப்பட்ட பின்னரே, சுழல் துப்பாக்கிகளைப் பாவிப்பதற்கான அவர்களின் உத்தரவுப் பத்திரம் புதுப்பிக்கப்படும். இதற்கான நடைமுறை விரைவில் அமுல் நடத்தப்படவுள்ளது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, தனியார் தொலைக்காட்சி ஒன்றிடம் நேற்று இவற்றைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எம்.பிக்களின் பாதுகாப்புக்காக சுழல் துப்பாக்கிகளை வழங்குவது கடந்த 25 வருடங்களாக நடைமுறையில் உள்ளது. எதுவித விசாரணைகளுமின்றி வருடந்தோறும் துப்பாக்கி உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.

இந்த நடைமுறையை நீக்கி இதற்கென ஒரு புதிய திட்டத்தை உள்ளக அமைச்சு விரைவில் அறிமுகப்படுத்தும். சுழல் துப்பாக்கியை வைத்திருக்க விரும்பும் எம்.பிக்கள் அதற்கென உள்துறை அமைச்சுக்கு விண்ணப்பித்து துப்பாக்கி வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை தெரிவிக்கவேண்டும்.

விண்ணப்பங்களைத் தனித்தனியாக உள்துறை அமைச்சு பரிசிலனை செய்யும். சுழல் துப்பாக்கி வழங்கப்படுவது அவசியமென அமைச்சு திருப்தியடையும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கையை அமைச்சு மேற்கொள்ளும்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ம)

## எரிபொருள் விலைகளில் உடனடி அதிகரிப்பில்லை

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட மாட்டா என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் தஹம் விமலசேன தெரிவித்திருக்கிறார்.

கடந்த முதலாம் திகதி முதல் பெற்றோலியக் கூடுத்தாபனத்திடமிருந்து வீதி அபிவிருத்தி வரி ஒன்றை திறைசேரி அறவிடுகின்ற போதிலும் எரிபொருள் விலைகளை விரைவில் அதிகரிக்கும் எண்ணமில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# பிறந்த குழந்தை தாதிமாரின் கவனக்குறைவால் இறந்ததா?

## கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் அவலம்

மருதமுனை,ஓக.8

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பிறந்த குழந்தை ஒன்று மூன்றாவது நாளில் இறந்துவிட்டது. இதற்குத் தாதிமார் மீது குற்றஞ்சாட்டுகிறார் பிள்ளையைப் பறிகொடுத்த தாய்.

பிரசவத்துக்காக தாய் கடந்த ஜூலை 31ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கடந்த 3ஆம் திகதி அழகான ஆண் குழந்தையைப பெற்றெடுத்தார். 6ஆம் திகதி குழந்தை இறந்துவிட்டது.

6ஆம் திகதி இரவு 3 மணியளவில் குழந்தை சுவாசிக்கக் கஷ்ரப்பட்டுக் கதறியது.

தாதிமாருக்குத் தகவல் கொடுத்து அவர்களின் உதவி கோரப்பட்டது. பாலைக்கொடுத்து பிள்ளையைத் தூங்க வைக்குமாறு ஆலோசனையே அவர்களிடமிருந்து கிடைத்தது.

நேரம் செல்லச் செல்ல குழந்தையின் நிலைமை மோசமாகியது. என்னதான் செய்வதென்று தாய்க்குத் தெரியவில்லை. அடுத்த பிரசவ வார்ட்டுக்கு குழந்தையைத் தூக்கிச்சென்று அங்கு கடமையில் இருந்த தாதியிடம் காட்டினார்.

அந்தத் தாதி சம்பந்தப்பட்ட அடுத்த வார்ட் தாதிமாருக்கு டெலிபோன் செய்துவிட்டுக் குழந்தையுடன தாயை அந்த வார்ட்டுக்குத் திருப்பி அனுப்பினார்.

மற்ற வார்ட்டுக்கு ஏன் போனாய்? என்று தாய்க்கு அர்ச்சனை. அது முடிந்த பின்னர் குழந்தையை ஒருவாறாக அதிகாலை 5 மணியளவில் சிகிச்சைக்குக் கொண்டு சென்றனர். நிலைமை "சீரியஸ்" என்று கண்டதும் 5.55 மணியளவில் குழந்தையை மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் ஆயத்தங்களைச் செய்தனர். அப்போது குழந்தை இறந்துவிட்டது.

கடமையில் இருந்த தாதிமார் வானொலி கேட்பது, தொலைபேசியில பேசிக்கொண்டிருப்பது. தூங்குவது ஆகியவற்றை எல்லாம் விட்டுவிட்டு மனிதாபிமானத்தோடு கடமையில் கண்ணாக இருந்து உரிய நேரத்தில் சிகிச்சை அளித்திருந்தால் குழந்தையை நிச்சயம் காப்பற்றியிருக்கலாம். "அநியாயமாகக் கொன்றுவிட்டார்களே" என்று அந்தத் தாய் கதறி அழுதார்.

அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடந்த இந்த அவலம் பற்றி வைத்திய அத்தியட்சகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. (ம)

# கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு தொகுதிக்கு தலா ஒரு கோடி ரூபா!

## சுயதொழில் முயற்சிகளுக்கு உதவி வழங்கப்படும்

கொழும்பு,ஓக.8

கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஒரு தொகுதிக்கு ஒரு கோடி ரூபா வீதம் வழங்குவதென அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இப்பணத்தைக் கொண்டு தொகுதி மக்கள் சுயதொழில் முயற்சிகளை கட்டியெழுப்புவதற்குத் தேவையான கட்டடப் பொருள்கள், விவசாய உபகரணங்கள், தையல் இயந்திரங்கள் என்பன வழங்கப்படும்.

பிராந்திய அமைச்சுகளின் ஊடாக இப்பொருள்களை வழங்குவதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்திருக்கின்றார். இந்திய கடன் திட்டத்தின் கீழ் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யும் இணக்கம் காணப்பட்டது.

இதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு கைத்தொழில் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (ம)

# நல்லூரில் முரண்டுபட்ட இளைஞர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.8

நல்லூர் ஆலய உற்சவ காலத்திற்கென விசேடமாகக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ள தொண்டர்களுடன் முரண்பட்டுக் கொண்ட 5 இளைஞர்கள் பிடிக்கப்பட்டு நல்லூர் சிறப்புச் செயலணியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பிடிக்கப்பட்ட இளைஞர்கள் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-5)

### ஈராக் தலைநகரில் உள்ள

# ஜோர்டான் தூதரகத்தில் கார்க் குண்டு வெடித்தது!

## 9 பேர் உயிரிழப்பு; 28 பேர் படுகாயம்!!

பக்தாத்,ஓக.8

ஈராக்கில் உள்ள ஜோர்டான் தூதரகம் குண்டுவெடிப்பில் பலத்த சேதமடைந்தது. நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர்; மேலும் 28 பேர் காயமடைந்தனர்.

தூதரகம் அருகே நின்றிருந்த வாகனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை 'ரிமோட்' கருவி மூலம் வெடிக்க வைத்திருக்கலாம் என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவித்தன.

இறந்தவர்களில் தூதரக ஊழியர்களும், பாதுகாப்பு ஊழியர்களும் அடங்கியுள்ளனர். இக்குண்டு வெடிப்பில் தூதரக கட்டடத்தின முன்பகுதி தகர்ந்து விழுந்துள்ளது.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஏராளமான ஈராக்கியர்கள் தூதரகக் கட்டடத்தின் மீது கைகளில் கிடைத்தவற்றை வீசியெறிந்ததாகவும் - அங்கு வைக்கப்பட்டிருந்த ஜோர்டான் மன்னர் அப்துல்லா மற்றும் அவரது தந்தை மன்னர் ஹுசைன் ஆகியோரது படங்களை உடைத்ததாகவும் - நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

தூதரகம் முன்பாகத் திரண்ட மக்களை அங்கு விரைந்த அமெரிக்கப் படையினர் விரட்டியடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தூதரகக் கட்டடத்துக்குள் மீதமிருந்தவர்களும் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சதாமின் ஆட்சிக்காலத்தில் ஈராக்குடன் நெருங்கிய தொடர்புவைத்திருந்த ஜோர்டான், ஈராக்மீதான போரின போது அமெரிக்காவுக்கு ஆதரவளித்தது. அத்துடன் சதாம் ஆட்சிக்காலத்தில் உணவுக்காக எண்ணெய் விற்கும் திட்டத்தின் கீழ் ஜோர்டான் பெரும் லாபமீட்டியதாகக் கூறப்படுகிறது. இவற்றால் ஜோர்டான் மீது ஈராக் மக்கள் கோபம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஓ)



கடந்த ஆண்டு இந்தோனேசியாவின் பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கின் முதலாவது சந்தேக நபரான அம்ரோஜியின் நர்ஹாசிம் என்பவர் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

200 பேர் பலியான இக்குண்டுவெடிப்பு குறித்து வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்ட சமயம் நீதிமன்றத்தில் அம்ரோஜி இருந்த நிலையை படத்தில் காணலாம்.

அம்ரோஜி தனிநாடு கோரி போராடும் முஸ்லிம் தீவிரவாத அமைப்பின் உறுப்பினர் என்று கூறுப்படுவது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற ஜோர்டானியத் தூதரகம்.

# பானங்களில் பூச்சிகொல்லி கண்டுபிடிப்பின் எதிரொலி!

புதுடில்லி,ஓக.8

பெப்சி, கொக்கோ கோலா உள்ளிட்ட சில பானங்களுக்கு இந்திய நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையிலும் சில தனியார் கல்லூரிகளிலும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்களின் தயாரிப்புகளான பெப்சி, கொக்கோ கோலா உள்ளிட்ட 12 பானங்களில் அளவுக்கதிகமாக பூச்சிகொல்லிகள் கலந்திருப்பதாக டில்லி அறிவியல் சுற்றுச்சூழல் மையம் கடந்த செவ்வாயன்று அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இந்திய நாடாளுமன்றில் இப்பிரச்சினை கிளப்பப்பட்டது.

கட்சி வித்தியாசம் இல்லாது பெருமபாலான உறுப்பினர்கள் பிரச்சினையைக் கிளப்பினர். இதற்கு இந்திய சுகாதார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பதிலளிக்கையில் -

"இந்த விடயம் தொடர்பாக உணவு பதப்படுத்தல் அமைச்சகம் உள்ளிட்ட சமபந்தப்பட்ட துறைகளிடமிருந்து விரிவான அறிக்கையைக் கேட்டுள்ளேன். அனைத்து உண்மைகளும் தெரிய வந்தபின்னர் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார்.

அடுத்து நாடாளுமன்ற உணவுக் குழுத் தலைவர் இ.அகமது நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் மேற்படி பானங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றது என அறிவித்தார்.

இதேபோல பல தனியார் பாடசாலை மற்றும் கல்லூரிகளும் இந்தப் பானங்களின் விற்பனையைத் தடை செய்துள்ளன என்று கூறப்படுகிறது.

## டில்லி ஆய்வு மையத்தின் மீது 'பெப்சி' நிறுவனம் பாய்ச்சல்

புதுடில்லி,ஓக.8

கொக், பெப்சி உள்ளிட்ட குளிர் பானங்களில் பூச்சி மருந்துப் படிவுகள் இருப்பதாக அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் என்னும் தன்னார்வ ஆய்வு அமைப்பு குற்றஞ்சாட்டியிருந்தது. ஆனால், அந்த ஆய்வு அமைப்பானது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்ல என்று கூறியிருக்கிறது பெப்சி நிறுவனம். தமது குளிர்பானத்தை ஆய்வுக்குட்படுத்த அந்த மையத்துக்கு என்ன தகுதி இருக்கிறது என்றும் கேள்வி எழுப்பி உள்ளது 'பெப்சி' நிறுவனம்.

தம் நிறுவனத்தின் குளிர்பானங்கள் கடுமையான தரச்சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் -

இந்திய அரசின் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட விம்டா ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட்டு, தரம் உறுதிப்படுத்தப்படுவதாகவும் -

பெப்சி நிறுவனம் கூறியுள்ளது.

## 'கெரில்லா' படையின் தலைவர் சதாமின் சொந்த ஊரில் கைது!

பக்தாத்,ஓக.8

ஈராக்கில் தாம் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது சதாம் ஆதரவுப்படையின் தளபதி என்று கருதப்படும் நபரையும், முன்னாள் இராணுவத தளபதிகள் இருவரையும் கைது செய்ததாக அமெரிக்க இராணுவம் அறிவித்தது.

சதாமின் சொந்த ஊரான திக்ரித்தில் இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர்களது பெயர்கள் வெளியிடப்படவில்லை.

இந்த மூவரும் ஆதரவாளர்களை ஒன்று திரட்டி 'கெரில்லா' குழுக்களை அமைத்து, கூட்டுப்படையினர் மீது தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்கப்படையினர் தெரிவித்தனர்.

கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் நேற்று திக்ரித்தை சுற்றிவளைத்து முற்றுகையிட்ட அமெரிக்கப் படையினர், அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து இந்த மூவரையும் கைது செய்தனர்.

இவர்களைத் தவிர வேறுபலரும் கைது செய்யப்பட்டதாகவும் - ஆனால், அவர்கள் அனைவரும், கிளர்ச்சி செய்தால் கொல்லப்படுவீர்கள் என்று எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ஓ)

## 350 ஆண்டுகள் பழைமை வாய்ந்த நேபாள ஆலயம் எரிந்து நாசம்!

நேபாளத்தின் காத்மண்டு பள்ளதாக்கில் உள்ள அனந்தபூர் கோயில தீயில் எரிந்து நாசமானது. 350 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இக்கோயில் முழுக்க முழுக்க மரத்தாலானது. பிரதாப மல்லர் என்ற மன்னர் 348 ஆண்டுகளுக்கு முன்னால் இக்கோயிலைக் கட்டினார். நேபாளத்தின் தொன்மை வாய்ந்த கலைச் சின்னங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்ந்து வந்தது. இக்கோயிலில் தினசரி பூஜைகள் நடப்பதில்லை. இக்கோயிலில் மின்சார விளக்குகளும் கிடையாது.

கடந்த திங்கட்கிழமை இரவு இககோயிலில் திடீரெனத் தீப்பிடித்தது. செவ்வாய்க்கிழமை காலை வரை தீ எரிந்து கொண்டிருந்தது. ஏராளமான தீயணைப்பு வாகனங்கள் 15 மணி நேரத்துக்கு மேல் போராடியும் பயனின்றி, கோயில் எரிந்து சேதமானது. அத்துடன் கோயிலில் இருந்த சிலைகளும வெப்பம் காரணமாகக் கடுமையாகப் பாதிப்பு அடைந்துள்ளன.

இக்கோயிலின் வாயிற் கதவு கடந்த 50 ஆண்டுகளாகப் பூட்டியே இருக்கிறது. தினசரி பொதுமக்கள் வழிபட கோயில் திறக்கப்படுவதில்லை. நாட்டுக்கு ஏதாவது நெருக்கடி ஏற்படும் போது மட்டும் இக்கோயிலைத் திறந்து சிறப்பு பூஜைகளைச் செய்வார்கள். இக்கோயில் எப்படித் தீப்பிடித்தது என்று விசாரிக்கவும், பிற பாரம்பரியச் சின்னங்களை எப்படி பாதுகாக்கலாம் என்று அறிவுரை கூறவும் 5 உறுப்பினர் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. (ஓ)

## 70 வயதில் சிறுமியுடன் 4 ஆவது திருமணம்

கெய்ரோ,ஓக.8

எகிப்தில் 70 வயது 'முதியவர் ஒருவர் 12 வயதுச் 'சிறுமியைத் திருமணம் செய்து கொண்டார். இச் சிறுமி அவருக்கு 4 ஆவது மனைவி ஆவார்.

இத்திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

பலதார மணத்தில் அதிக நம்பிக்கை உள்ளவன் நான் என்று சந்தோசமாகச் சொன்னார் அந்த முதியவர். (ஓ)

## கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்க எலிகளுக்கு தன்சானியாவில் பயிற்சி!

கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்க ஆபிரிக்க நாடான தன்சானியாவில் எலிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உலகம் முழுவதும் அசசுறுத்தும் தீவிரவாதம், யுத்தம் இவற்றினால் கண்ணிவெடிகளின் அபாயம் அதிகரித்துள்ளது.

கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பதற்கு எத்தனையோ சாதனங்கள் வந்துவிட்டன. இந்நிலையில் இவற்றைக் கண்டுபிடிக்க எலிகள்தான் சிறநதவை என்று விஞ்ஞானிகள் கூறியிருக்கின்றனர்

ஆபிரிக்க நாடான தன்சானியாவில் நிலக்கண்ணி வெடிகளை கண்டறிய எலிகளுக்கு விஞ்ஞானிகள் பயிற்சி வழங்குகின்றனர்.

இந்த எலிகள் 75 சென்ரிமீற்றர் நீளமும் 1.35 கிலோ எடையும் உடையவை. மோப்பநாய்களை விட எலிகள் இவ்விடயத்தில் சிறந்தவை என்று பயிற்சிகளை வழங்கிவரும் சொகயின் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், நாய்களைப் பராமரிப்பதனை விட எலிகளின் பராமரிப்புச் செலவும் குறைவு. ஒரு பழம் கொடுத்தால் போதும், வேலைகளை கச்சிதமாக முடிக்கின்றன என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## செவ்வாய்க் கிரகத்துக்கு 2007இல் விண்கலம்

நாஸா,ஓக.8

செவ்வாய்க் கிரகத்தின் வடக்குபகுதியை ஆராய 2007இல் விண்கலத்தை அனுப்ப அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பு முடிவுசெய்திருக்கிறது. செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பனியையும் மண்ணையும் அது ஆராயும்.

ஆளற்ற 'பீனிக்ஸ் லேண்டர்' என்ற விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் 2008இல் இறங்கும். செவ்வாய்க் கிரகத்தில் தரைக்கு அடியில் உள்ள பொருள்களின் மாதிரி சேகரிக்கப்படும்.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருப்பதற்கு சாதகமாக எப்போதாவது அங்கு தண்ணீர் இருந்திருக்கிறதா என்று, ரோவர்ஸ் என்ற விண்கலம் ஏற்கனவே கொண்டுசென்ற ஸ்பிரிட், ஓப்பர்சூனிட்டி ஆகிய ஆய்வு வாகனங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் செவ்வாய்க் கிரகத்தின் எதிரெதிர் திசைகளில் இறங்கி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளன.

நாஸா அனுப்பிய 'குளோபல் சேவயர்', 'ஒடிசி' ஆகிய இரு கலங்கள் செவ்வாய்க் கிரகத்தை இப்போது சுற்றிவருகின்றன; அத்துடன், படங்களையும் எடுத்து அனுப்பிவருகின்றன. (ஓ)



## ஜெனரேற்றர் அன்பளிப்பு

சங்கானை,ஒக.8

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் போஷகரும், தற்போது வெளிநாட்டில் வசிப்பவருமான கந்தையா சின்னராசா சங்கானை செங்கற்படை மகாதேவ பிள்ளையார் ஆலயத்திற்கு மின்பிறப்பாக்கி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (எ-29)

## மானிப்பாய் இந்துவில் கலாசார மண்டபம்

வலிகாமம்தெற்கு,ஒக.8

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் இதற்கு முன்வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் பழைய மாணவனும், தென்கிழக்காசியாவில் பிரபல தொழிலதிபராகவும் விளங்கும் ஒருவர் இதற்கென இரண்டரை மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (எ-152)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வலிகாமம்தெற்கு,ஒக.8

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான மகா வித்தியாலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம், அராலி வடக்கு அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றிலேயே அதிபர் பதவி வெற்றிடம் நிலவுகின்றது.

இவற்றுக்காக விண்ணப்பிப்பவர்கள வலிகாமம் கல்வி வலயத்தில் உரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து இம்மாதம் 12ஆம் திகதிக்கு முன்பாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவைத் தரத்தையுடையவர்களும், இலங்கை ஆசிரிய சேவையில் தரம் ஒன்று, தரம் 2 வகுப்பு II, தரம் 2 வகுப்பு I ஐச் சேர்ந்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## பல்கலைக்கழக மாணவருக்கு புலமைப்பரிசில்

தென்மராட்சி,ஒக.8

கச்சாய்ப் பகுதியிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கச்சாய் வினோபா சன சமூக நிலையத்தினர் புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளனர்.

புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கசசாய் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் யாழ்.செயலக புனர்வாழ்வு பிரிவு திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-117)

---

# Y.W.C.A.

The Annual General Meeting of the Young Women's Christian Association will be held on

**Saturday 23rd August 2003**

at 3.30 p.m (SLT) at the

**Jaffna Y.M.C.A. Hall**

All members and well wishers are invited.

Ms. A.Sinnathamby
Gen.Secretary

(21160)(21-14-16)

---

## வீடு, தோட்டம் விற்பனைக்குண்டு

1. யாழ். வீதியில் 3பரப்புக் காணியுடன் நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு.
2. கச்சேரி நல்லூர் வீதியில் இரண்டு அடுக்குகளையும், நிலவறையையும் கொண்ட 4000 சதுர அடி விஸ்தீரணமுள்ள மாடி வீடு 6 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. இந்த வீடு மூன்றாவது மாடி கட்டத்தக்க தள அமைப்புக் கொண்டது. இதைவிட தனியானதொரு கட்டடமும் உள்ளது.
3. பளையில் 30 ஏக்கர் தென்னந்தோட்டமும் ஓரளவு சேதமடைந்த வீடும் நல்ல கிணறும் கொண்ட தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **சிவராஜா** அல்லது **மகா**
151, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.
T.P. 077-7116695.

(21132) (21-26-14-16)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 05 - 1917 | 20 - 07 - 2002 |

### திருமதி பொன்னையா சின்னத்தங்கச்சி

விழுதுகள் பரப்பி நின்ற விருட்சமொன்றை
விதி கொண்டு சென்றது - நாம்
அழுதழுது ஆண்டொன்று ஆனதே - ஆனாலும்
ஆறவில்லை உம் நினைவுகள்!
பொழுதுகள் போனதே உன்
பூமுகம் மாறவில்லையே!

கதை சொல்லிக் கதை சொல்லி
சிரிக்க வைத்தாய்! நீ
சிதையில் எரித்தாலும்
நாளும் ஓயாது
உன்கதை.... எம் வாழ்வில்!


- பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு.
விளாத்தியடி ஒழுங்கை, உரும்பிராய்.

(21144)(21-14-16)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### பொன்னையா தங்கராசா

(பத்தர்)

தோற்றம் 29-02-1929 — மறைவு 09-07-2003

*உடல் எமைவிட்டுப் பிரிந்தாலும்*
*உணர்வால் எம்முடன் வாழும் இதயத் தெய்வமே!*
*நீர் பிரிந்து முப்பத்தொரு நாள் சென்றாலும்*
*என்றும் உம் நினைவுடன்....*

இன்று (08-08-2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
பார்லேன்,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
சுதுமலை.

(21104) (21-14-16)

---


**Awaiting A/L Results**

**Study In India - Bangalore University at**
**NATIONAL FIRST GRADE COLLEGE**
2nd Cross, Bhoopasandra, R.M.V. Extn 2nd Stage, Bangalore 94
T.P: 0091-80-3414557, 3417833 Fax : 0091-80-3615621, 3417832
E-mail : nfgc@bal.vsnl.net.in web : www.nfgcollege.com

THREE YEARS

**Bangalore University Degree**

**கடந்த 10 ஆண்டுகளாக பின்வரும் பட்டப்படிப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.**

| | |
|---|---|
| B.Sc. | - உயிரியல் தொழில்நுட்பம் |
| B.Sc. | - மரபணுவியல் |
| B.Sc. | - நுண் உயிரியல் |
| B.Sc. | - கணனி விஞ்ஞானம் |
| B.B.M. | - தொழில் முகாமைத்துவம் |
| B.C.A. | - கணனிப் பிரயோகம் |
| B.Com+ | - கணனி |
| M.Sc. | - நுண் உயிரியல் |
| M.Sc. | - உயிரியல் தொழில்நுட்பம் |
| M.B.A. and M.Sc. | |

2003 ஆவணி மாதம் 9ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலவசக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் 2003 ஆவணி 9ஆம், 10ஆம் திகதிகளில் கொழும்பு கில்ற்றனில் அப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நுண் உயிரியல் முதுமாணிப் பட்டத்தில் 100% முதற்றரத்தில் சித்தியெய்தியுள்ளார்கள். இவர்கள் முதலாம், 2ஆம் தரங்களில் சித்தியெய்தியுள்ளார்கள். 250இற்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே விடுதி வசதிகள் உள்ளன. 150 இலங்கையர்கள் ஏற்கனவே பட்டம் பெற்றுள்ளார்கள். 24 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்கிறார்கள். இந்திய அரசின் புலமைப்பரிசுத் திட்டத்தின் மூலம் ICCR ஊடாக இதற்கான பதிவுக் கட்டணம் US$ 400

2003 உயர்தரக் கல்வி முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் இணைந்துகொள்ளலாம்.
இதன் மூலம் ஒரு கல்வி ஆண்டை மீதப்படுத்திக்கொள்ள முடியும்.

09ஆம், 10ஆம் திகதிகளில் இணைந்துகொள்பவர்களுக்கு
வசதியான முறையில் கட்டணங்கள் அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

**Company Secretarial Services (pvt) Ltd. 285C 1/1, Stanley Tillakaratne Mawatha, Jubilee Post, Nugegoda.**
**Tel: 01-854436 E-mail : yapadd@sol.lk Mr.Gunawardana Res. 01-811524 Mr.Gunasekara Res.038-2232657, 038-2234154, 078-697512**

(C/29323) (22-11)

உதயன்

# குடிபானங்களா? உயிர் குடிக்கும் பானங்களா?

இந்திய குளிர்பானச் சந்தையில் விற்பனையாகும் 'பெப்ஸி', 'கொக்கோகோலா', 'பன்ரா', 'செவன் - அப்' உட்படப் பன்னிரண்டு பிரபல குளிர்பான வகைகளில் பூச்சிகொல்லிகள் என்ற பெயரில் அளவுக்கதிகமான நச்சுப்பொருள் கலக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு திடுக்கிடும் ஆய்வுத் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது டில்லியைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுச்சுழல் மையம்.

தண்ணீரில் உள்ள கிருமிகளை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஆர்கனோ குளோரைன் மற்றும் ஆர்கனோ பொஸ்பரஸ் ஆகிய இரசாயனப் பொருள்களே இந்தக் குளிர்பானங்களில் அளவுக்கு அதிகமாகக் கலந்திருப்பது ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அளவைவிட முப்பது முதல் முப்பத்தியாறு மடங்குவரை அதிகமாக இந்த நச்சுப் பொருள்கள் மேற்படி குடிபானங்களில் கலந்திருக்கின்றன என்ற அதிர்ச்சித் தகவல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வளவு அதிக அளவில் பூச்சிகொல்லி இரசாயனப் பொருள்கள் நமது உடலில் சிறிதுசிறிதாகச் சேருமானால் அதனால் நீண்டகாலப் புற்றுநோய், நரம்புக் கோளாறு, குழந்தை பிறப்புப் பாதிப்பு போன்றவை ஏற்படும். அதுமட்டுமல்லாமல், இறுதியில் உயிருக்கே ஆபத்து நேரும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நவீன உலகின் வளர்ச்சி, புரட்சி என்ற பெயரில் ஏற்பட்ட மாற்றங்கள் நமது சமூகத்துக்குத் தேடித் தந்த வினைகளில் இதுவும் ஒன்று.

ஆனால், இதில் விந்தை என்னவென்றால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இதேபெயரில் தயாரித்து விற்பனைக்கு அனுப்புப்படும் இதே ரக குளிர்பானங்களில் இவ்வாறு பூச்சிகொல்லி மருந்து காணப்படவில்லை என்று ஆய்வுத் தகவல்கள் தெரிவிப்பதுதான்.

இந்த விடயத்தில் அந்த நாடுகள் கடைப்பிடிக்கும் கடுமையான ஒழுங்குமுறைகள் இதற்குக் காரணம் என்கின்றது இவ்விடயத்தை ஆய்வு செய்துவரும் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம்.

பிரபல - சர்வதேச - கம்பனிகள், மூன்றாம் மண்டல நாடுகளைத்தான் - அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைத்தான் - தலையில் மிளகாய் அரைக்கும் தமது கைங்கரியத்துக்குத் தேர்ந்தெடுத்திருக்கின்றன என்பதையே இந்தத் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தக் குளிர்பானங்களின் நிலைமை என்னவென்பது இன்னும் ஆய்வு செய்யப்படவில்லை. இந்தியாவில் இக்குளிர்பானங்கள் தொடர்பாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியிருப்பதால் இலங்கையிலும் இப்பானங்களை உடனடியாக ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமாகும்.

அதுவும் நடுநிலை சார்ந்த - தகுதியான - திறமைமிக்க - ஆய்வுக் குழு ஒன்றினால் இப்பணி மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது.

மறைந்திருந்து மக்கள் உயிரைக் குடிக்கக் கூடிய - மக்களின் நல்வாழ்வுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய - இந்த விடயங்களை வெறும் வர்த்தகக் கண்கொண்டு மட்டும் நோக்காமல், மக்கள் நலன் என்ற கண்ணோடும் நோக்குவது அவசியமாகும். அத்தோடு, இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுப்பதும் அதைவிட அவசியமானதாகும்.

மக்கள் மத்தியில் அதிகம் வரவேற்பைப் பெற்றுள்ள - மக்களை அதிகம் கவரும் வகையில் தமது விற்பனையைப் பெருக்கியுள்ள - இந்த குளிர்பானத் தயாரிப்பாளர்கள், தங்களின் தயாரிப்புகளை ஆய்வுசெய்ய சர்வதேச நிறுவனம் ஒன்றை அரசு நியமித்தால் அதை ஏற்கத் தாங்கள் தயார் என இந்தியாவில் அறிவித்துள்ளனர்.

இத்தகைய யோசனையை நமது நாட்டிலும் நடைமுறைப்படுத்தவும், சர்வதேச மட்டத்தில் கலந்துரையாடி இவ்விடயத்தில் மக்களைச் சரியான வழியில் நெறிப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுப்பது பொறுப்புள்ள அதிகாரிகளின் கடமையாகும்.

தமிழர்களின் நிகழ்வுகளில்

# புலிக்கொடி ஏற்றப்படுவது யுத்தநிறுத்த மீறல் ஆகாது!

## படைத்தரப்புக்கு எழிலன் விளக்கம்

வவுனியா,ஓக.8

எமது எந்தவொரு நிகழ்விலும் விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றுவது வழக்கமான ஒரு நிகழ்வு அது யுத்தநிறுத்த மீறல் அல்ல.

படைத்தரப்பினருக்கு இவ்வாறு விளக்கமளித்தார் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்.

விடுதலைப் புலிகள், படைத்தரப்பினர் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் கலந்துகொள்ளும் மாதாந்தக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெறும் தமிழர் தரப்பு நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றப்படுவது யுத்த நிறுத்த விதிகளை மீறும் ஒரு செயல் என்று இக்கூட்டத்தில் படைத்தரப்பினர் பிரஸ்தாபித்தனர். இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் பேசிய எழிலன்:-

புலிக்கொடி ஏற்றப்படுவது வழக்கமான ஒரு நிகழ்வுதான் என்று தெரிவித்தார்.

ஜே.வி.பி. போன்ற கட்சிகள் கூட்டங்களில் அவர்களது கட்சிக் கொடிகளை ஏற்றமுடியுமென்றால், விடுதலைப் புலிகள் மட்டும் ஏன் புலிக்கொடியை ஏற்றக்கூடாது? என்றும் எழிலன் அப்போது கேள்வி எழுப்பியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக படைத்தரப்பினர் மேலும் ஆட்சேபம் தெரிவிப்பின் விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்துடன் அரசு தரப்பு பேச்சு நடத்தி இது குறித்து தீர்மானிக்கவேண்டும் என்றும் எழிலன் குறிப்பிட்டார்.

இதேவேளை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் பிரத்தியேக தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படவேண்டுமென கூட்டத்தில் புலிகள் தரப்பு கோரியது.

இதற்கு தமது மேலிடத்துக்கே இதற்கான அனுமதி தரும் அதிகாரம் உள்ளதென கூட்டத்தில் பங்கேற்ற படைத்தரப்புப் பிரதிநிதிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. (ஒ-12)

யாழ். பொலீஸ் நிலையத்தில்

# குடும்பப்பிணக்கு முறைப்பாடுகள் ஏழு மாத காலத்தில் அதிகரிப்பு!

## பதிவேடுகள் தரும் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ். பொலீஸ் நிலையத்தில் கடந்த வருடத்தைவிட இந்த வருடம் குடும்பப்பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்திருப்பதாக பொலீஸ் நிலையப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 7 மாதகாலப் பகுதியில் மட்டும் 120 இற்குமேற்பட்ட இத்தகைய முறைப்பாடுகள் யாழ். பொலீஸ் நிலையத்தில் பதிவாகியிருக்கின்றன.

இந்தத் தொகை ஒப்பீட்டளவில் கடந்த வருடத்தைவிட மிகவும் அதிகமாகும் என்றும் - பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தகைய முறைப்பாடுகளில் குறிப்பிட்ட சிலவற்றை தாம் சமரசம் செய்துவைத்திருந்தாலும் பல பிணக்குகள் குறித்து நீதிமன்றம்வரை செல்லவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குடும்பப் பிணக்குகள் விடயத்தில் சம்பந்தப்பட்ட கணவன், மனைவி இருவரினதும் விருப்பங்களுக்கு மாறாக தம்மால் எதனையும் செய்யமுடியாதிருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் காதலனால் ஏமாற்றப்பட்ட பெண்கள் எனப் பலர் கண்ணீரும் கம்பலையுமாகப் பொலீஸ் நிலையத்துக்கு வருகின்றனர்.

காதலித்து திருமணம் செய்துகொள்வோர் பெரும்பாலும் உரியமுறையில் விவாகப்பதிவுகளை மேற்கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

அத்துடன், காதலிக்கும் பெண்கள் சிலர் திருமணத்துக்கு முன்னரே காதலனை நம்பி தம்மை இழந்துவிடுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

இதனால்தான் இத்தகைய நிலை பெரிதும் ஏற்படுகின்றது.

- இவ்வாறு யாழ். பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-4)

# தென்பகுதியில் இருந்து வெற்றிலை எடுத்து வருவதைத் தடுத்து நிறுத்துக!

## அரசியல்துறையினரிடம் இளவாலை சம்மேளனம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.8

கொழும்பிலிருந்தும் தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்தும் தினமும் ஏ-9 தரைவழிப் பாதை ஊடாகப் பெருமளவு வெற்றிலை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படுவதால் இங்கு பாரம்பரியமாக வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டு வருவோர் பொருளாதார ரீதியில் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் வெற்றிலைச் செய்கையை முற்றாகக் கைவிட வேண்டிய நிலைக்கும் இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இளவாலை வடக்கு விவசாயிகள் சம்மேளனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சம்மேளத்தின் தலைவரும், இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான செ.பத்திநாதரினால் விவசாயிகள் சம்மேளத்தின் சார்பில் இந்த மகஜர் கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இளவாலைப் பகுதியிலும் ஏனைய இடங்களிலும் விவசாயிகளும் தனிப்பட்டவர்களும் பாரம்பரியமாக - நீண்ட காலமாக - வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

வெற்றிலைச் செய்கைக்கு பிரசித்திபெற்ற வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் தாம் தற்போது குடியிருக்கும் இடங்களில்கூட வெற்றிலைச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள வெற்றிலைத் தோட்டங்களில் நோய்த் தாக்கம் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், தொழிலாளர்களுக்கான கூலியும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கொழும்பு வெற்றிலையின் வருகையினால் இவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உற்பத்திசெய்யும் வெற்றிலையை விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மிகக் குறைந்த விலையில் நஷ்டத்திற்கு வெற்றிலையைச் சந்தைப்படுத்தவேண்டிய நிலையும் உருவாகியுள்ளது.

இதனால், பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டுவரும் வெற்றிலைச் செய்கையைக் கைவிடவேண்டிய நிலைக்கு இப்பிரதேசத்திலுள்ள வெற்றிலைச் செய்கையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, தயவுசெய்து தாங்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுத்து கொழும்பிலிருந்தும் மற்றும் தென்னிலங்கையின் ஏனைய பகுதியிலிருந்தும் யாழ். மாவட்டத்திற்கு விற்பனைக்காகவெற்றிலை கொண்டுவரப்படுவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டிக்கொள்கின்றோம் - என்று அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-135)

கொடிகாமம் சந்திப் பகுதியில்

# வீதி புனரமைப்புப் பணிக்கு வசதியாக முட்கம்பிகளை படையினர் அகற்றுவர்

## அதிகாரசபை பொறியியலாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.8

வதிப் புனரமைப்புக்கு இடையூறாக உள்ள முட்கம்பி வேலிகளை விரைவில் அகற்றித் தருவதாக கொடிகாமம் சந்திப் பகுதியில் முகாமிட்டுள்ள படையினர் உறுதியளித்துள்ளனர் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ்.ஶ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

மேற்படி பகுதியில் முகாமிட்டுள்ள படையினர் தமது முகாமைச் சுற்றி அமைந்திருக்கும் முட்கம்பி வேலியினால் வீதிப் புனரமைப்பை மேற்கொள்ளமுடியாதிருந்தது.

தற்பொழுது எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட படையினர் விரைவில் அந்த முட்கம்பி வேலிகளை அகற்றுவதுடன், தம்மால் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காவலரண்களையும் சற்றுப் பின்நகர்த்துவதாக உறுதியளித்துள்ளனர் - என்று பிரதம பொறியியலாளர் தெரிவித்தார். (எ-10-12)

**நாளை**

ஆடி 24
சனிக்கிழமை
(09.08.2003)
திதி : துவாதசி
பிற்பகல் 2.58 வரை
நட்சத்திரம்: மூலம்
முற்பகல் 11.11 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 3.04 - 4.34
ராகுகாலம்: 9.04 - 10.34
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மனிதனை முழுமையாக அறிந்து கொள்வதற்குரிய திறவுகோல் புன்னகையே.

# தீவக அதிபர், ஆசிரியர்களுக்கு வேதன மாற்றக் கடிதங்கள்

## வலயக் கல்வி அலுவலகத்தினால் அனுப்பிவைப்பு

மண்டைதீவு,ஓக.8

தீவகக் கல்வி வலயத்தில் அதி உச்ச சம்பளம் பெற்றுவந்த அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப்படி நிலைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

உச்ச சம்பள நிலையை அடைந்த பின் தேக்கநிலையில் இருந்த அனைவருக்கும் சம்பள மாற்றக் கடிதங்கள் தீவகக் கல்விப் பணிமனையால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.

அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் கடந்த ஜூன் மாதம் வெளியிடப்பட்ட 7/2003ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாகவே கொடுப்பனவுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

1997இன் பின்னர் தேக்க நிலைச் சம்பள உயர்ச்சியை பெறாதவர்கள் ஏழு சம்பள உயர்வுகளையும், இதுவரை தேக்க நிலைச் சம்பள உயர்ச்சியைப் பெற்றவர்கள் ஐந்து வருடத்திற்கான சம்பள உயர்ச்சிகளையும் இதன்மூலம் பெறவுள்ளனர். (எ-88)

## தென்புலோலி உபயகதிர்காமக் கந்தன்
# தீர்த்தோற்சவ விழா

எதிர்வரும் 11-08-2003 திங்கட்கிழமை (முழுநிலா நாளன்று) காலை 9.05 மணி தொடக்கம் உபயகதிர்காமக் கந்தன் திரு உலா வந்து நீராடி அடியவர்களுக்கு அருள்பாலித்தருளுவார்.

10-08-2003 ஞாயிறு காலை இரதோற்சவம் நடைபெறும்.

**ஆலய புனருத்தாரண சபையும்**
**தென்புலோலி மக்களும்.**

(சி-29343)(21-11-14)


## பரிசளிப்பு விழா

கோப்பாய்,ஓக.8

கோப்பாய் கல்விக் கோட்ட மட்டத்தில் இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (எ-72)


# துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தின் சமூகசேவை உத்தியோகத்தரான திரு.வ.சுரேஷ்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும்,*
*அனைத்து உத்தியோகத்தர்களும்.*


நலன்புரிச்சங்கம்,
வலி.தெற்கு, உடுவில்.

(21155) (21-26-11-14)



# கூரை அமைப்பில் புதிய அலை
# அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுபர் ஷெல்டா

நீடித்த பாவனைக்கு பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள். இதனை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்.

Access Graphics

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
**சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ,பெக்ஸ்: 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 - 09 - 1936



இறப்பு 19 - 07 - 2002

நயினை அமரர்

## இராமநாதன் கோபாலபிள்ளை

திதி: பூர்வபக்க ஏகாதசி

குன்றென நிமிர்ந்த சிரித்த கோபுரம்
குலையாத வாழ்வினை நிமிர்த்திய ஆலமரம்
இன்றுடன் ஆண்டு ஒன்றினில் நிறைகின்றது
இதயமான "ஐயா"வை தெய்வமாய் நினைக்கின்றோம்
மனைவி, பிள்ளைகள், சுற்றத்துடன் மகிழ்ந்திருந்த
நிலவே! "நயினை நிறைவே" பாசம் தொடர்கின்றோம்

எமது குலதீபத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அரசடிப் பிள்ளையாரையும் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளையும் கடுக்காயடி ஞானவைரவரையும் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

*2/1, மூர்த்தவிநாயகர் வீதி,*
*கடுக்காயடி லேன்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(21137) (21-26-11-14)



# Browns
Electronics

வாழ்வில் அதிசய மகிழ்ச்சி!

# Quality இலாபம்

நம்பமுடியாத விலைகளில் உலகத்தரமிக்க உன்னதச் சாதனங்கள்




**SHARP**
14 அங்குல தொலைகாட்சிப் பெட்டி வாங்கினால்...

5 வருட உத்தரவாதம்




**Cornell** பிளென்டர் **இலவசம்**



**SHARP**
20/21/29 அங்குல தொலைகாட்சிப் பெட்டி வாங்கினால்...

5 வருட உத்தரவாதம்



**Moulinex** டோஸ்டர் **இலவசம்**

**SHARP**
**ES-60W**
சலவை இயந்திரம்



ரூ.1000/- சேமியுங்கள்



ரூ.2500/- சேமியுங்கள்


**SHARP**
**SJK-21P**
குளிர்சாதனப்பெட்டி

5 வருட உத்தரவாதம்



**Sumeet**
**DM 200**
பிளென்டர்

ரூ. 650/- சேமியுங்கள்



**SHARP**
**WF-2100W**
கசட் ரெக்கோடர்

ரூ.1000/- சேமியுங்கள்



**ELBA®**
**EFSA 801**
சலவை இயந்திரம் வாங்கினால்...



**ELBA®**
ஸ்டீமர் அயன்
**இலவசம்**

TNT Grafix

பிறவுன்ஸ் உத்தரவாதப் பத்திரத்தை கேட்டுப்பெறுங்கள்

BROWNS GROUP BG ESTD 1875


# Browns
Group of Companies

89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225150

இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

# கோதுமை மா விலை கூடிக்குறைந்து பான் உற்பத்தியைப் பாதிக்கின்றது!

## வர்த்தகத்தைப் பரவலாக்கும்படி பேக்கரி அதிபர் அநுர வலியுறுத்து



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் அநுர விஜேசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருபபவர் மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி க.குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் 'வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் கடந்த 5 ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் அநுர விஜேசிங்க.

பேக்கரித் தொழிலில் நவீன இயந்திரங்களைப் புகுத்தி, பேக்கரித் தொழிலில் சாதனை படைத்தவர் அநுர விஜேசிங்க.

ஊவா மாகாணத்தில் பண்டாரவளை நகரில் 1963ஆம் ஆண்டு இவரது தந்தை பேக்கரியை ஆரம்பித்தார். தந்தையுடன் இணைந்து அநுர விஜேசிங்கவும் பேக்கரித்துறையில் நுழைந்தார். பேக்கரித்துறையில் சாதனை புரிய வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்குச் சென்று பேக்கரித் தொழிலின் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். வெளிநாடுகளில் பெற்ற பயிற்சியுடன் நாடு திரும்பி பேக்கரித் தொழிலில் சாதனை படைத்தார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் அநுர விஜேசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப்பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:-* உங்கள் பேக்கரித் தொழில் வளர்ச்சிபெற்ற விதம் குறித்துக் கூறுங்கள்?

*பதில்:-* இந்த பேக்கரித் தொழில் எனது தந்தையின் வழியில் எனக்கு உரிமையானது. 1963ஆம் ஆண்டு எனது தந்தை இத்தொழிலை ஆரம்பித்தார். நான் பாடசாலைக் கல்வியின் பின்னர் தந்தையுடன் இணைந்து இத்தொழிலில் ஈடுபட்டேன்.

வெளிநாடுகளில் பேக்கரிக்காரர் நவீன இயந்திரங்களுடன் இயங்கி வருவது குறித்து கண்டறிய இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தேன்.

இந்நாடுகளின் நவீன இயந்திரங்கள் மூலம் பேக்கரித் தொழிலில் முன்னேற்றம் காண்பது எப்படி என்பதைக் கற்றுக்கொண்டேன்.

இலங்கை திரும்பி நான் எனது றோயல் பேக்கரியை நவீனமயப் படுத்தினேன்.

ஊவா மாகாணத்தில் சிறந்த தொழில் முயற்சியாளர் விருது எனக்கு 1997ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

*கேள்வி:-* இந்த நாட்டில் தந்தை வழியில் வ்த்தகத்துறையில் பிரகாசிபவர்கள் பலர் இருக்கின்றனர். நீங்கள் உங்கள் துறையில் உயர்வதற்குத் தந்தை வழங்கிய அறிவுரைகள் என்ன?

*பதில்:-* எனது தந்தை எனக்கு வழங்கிய முக்கிய அறிவுரையானது பொய் வாழ்க்கையில் இருக்கக்கூடாது என்பதே.

'நிமிர்ந்து நின்று தொழிலைக் கவனிக்கவேண்டும். எதற்கும் சோர்ந்து விடாதே' என்றும் அவர் அறிவுரை வழங்கினார். இன்று ஒரு நாளைக்கு 50 மூடை கோதுமை மாவில் நான் உணவுப் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். செலான் வங்கி எனக்கு மிகவும் உதவியது.

25 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கும் அளவுக்கு என்னுடன் எனது பேக்கரியை உயர்த்த உதவியது.

*கேள்வி:-* உங்கள் தொழிலின் மூலப்பொருள் கோதுமை மா. இத்துறை இலங்கையில் ஏகபோக வர்த்தகமாக இருக்கின்றது. இதுகுறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில்:-* கோதுமை மா போட்டி அடிப்படையில் சந்தைக்கு வரவேண்டும். ஏகபோக வர்த்தகமாதலால் இவர்கள் அரசாங்கத்தின் அழுத்தத்தால் அவ்வப்போது கோதுமை மாவின விலையை கூட்டிக் குறைக்கின்றனர். இதனால் எமது உற்பத்திகளுக்கு நிரந்தர விலையை நிர்ணயிக்க முடியாதுள்ளது.

இதனால் கோதுமைமா வர்த்தகம் பரவலாக்கப்படவேண்டும். திறந்த பொருளாதாரம் காரணமாக சிறந்த பயன்கள் ஏற்படும். அதேவேளை, இது போன்ற சிக்கல்களும் ஏற்படுகின்றன.

*கேள்வி:-* உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எவை?

*பதில்:-* எதிர்காலத்தில் புதிய உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்து பேக்கரித்துறையில சாதனை படைக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாகும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

நியாயமான இலட்சிய இலக்கை நோக்கி

# மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் நிச்சயம் வெல்லும்!

## மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் உறுதி

கொழும்புத்துறை,ஓக.8

நேர்மையும் நியாயமும் நிறைந்த இலட்சிய இலக்கை நோக்கி தமிழ் மக்களின் விடுதலைக்காக மக்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெல்லும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

யாழ். நல்லூர் கோட்டமட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நல்லூர் நாவலர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் செம்மணன் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

தேசியத் தலைவரின் சிந்தனையில் உதித்த மக்கள் அமைப்புத் தான் தேசிய எழுச்சிப் பேரவை.

வன்னியில் யுத்த வேளைகளில் போர் எழுச்சிக்குழு எல்லைப்படையாக யுத்தமுனையில் எமக்கு பக்க பலமாக நின்று எதிரியுடன் போராடியது. இதுவரை 293 எல்லைப்படை வீரர்கள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

வாழவேண்டுமென்றால் போராடத்தான் வேண்டும். இது வன்னியின் அப்போதைய நிலை. எதிரியைத் துரத்த வேண்டும் என்ற தன்மானத் துடிப்பே மக்கள் படையாக உருவெடுத்தது. ஓயாத அலைகளின் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்புலமாக இருந்தது மக்கள் போர் எழுச்சிக் குழுவே.

அதேபோன்று, யாழ்ப்பாணத்தில் விடுதலை பற்றிப் பேசவோ உணர்வுகளை வெளிப்படுத்தவோ தடையும், தயக்கமும் இருந்த இக்கட்டான வேளையில் பொங்கி எழுந்தது பொங்குதமிழ் என்னும் மக்கள் எழுச்சி. இதனூடாக மக்கள் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தி எமக்கு ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தனர்.

இவ்வாறான மக்கள் எழுச்சிகளின் பலம்தான் இன்றைய சமாதானம். இந்த சமாதானம் நிலைக்க மக்கள் எழுச்சி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும்.

தலைவரின் கரத்தைப் பலப்படுத்த அனைவரும் முனைப்புடன் முன்வந்தால் எமது இலக்கை அடைவது நிச்சயம்.

'ஓயாத அலைகள்' யாழ். குடாநாட்டை நோக்கி வந்துகொண்டிருந்த வேளை, கச்சாய் பகுதியில் பின்கள காவல் கடமையில் எல்லைப்படை வீரர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் 55 வயதுடையவர். அப்போது அவர்களின் நிலையை ஊடறுத்து இராணுவம் தாக்குதல் நடத்தியது.

எல்லைப்படையினரிடம் இருந்த துப்பாக்கிக்குண்டுகள் தீர்ந்துவிட்டன. ஒவ்வொருவரிடமும் ஒரு கைக்குண்டு மட்டும் இருந்தது. அப்போது அந்த வயோதிப எல்லைப்படை வீரர், ஏனைய வீரர்களிடம் 'நாம் எதிரியிடம் பிடிபடக்கூடாது. தப்பிச்செல்லக்கூடியவர்கள் தப்புங்கள். இல்லையேல் குண்டைவெடிக்கவைத்து வீரச்சாவடைவோம்' என்று கூறி குண்டை வெடிக்க வைத்தார்.

அவரது உயிர் பிரியும்போது கூட தனது மனைவி, பிள்ளைகளை அவா நினைத்து குரல் எழுப்பவில்லை. 'தமிழரின் தாகம்' என்ற வார்த்தையையே இறுதிவரை உச்சரித்தார்.

இவ்வாறான விடுதலை வேட்கை கொண்ட மக்களின் பலம்தான் இன்றைய சமாதானத்தின் அடித்தளமாகும்.

நேர்மையும் நியாயமும் நிறைந்த இலட்சிய இலக்கை நோக்கி தமிழ் மக்களின் விடுதலைக்காய் மக்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெல்லும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் கடலிலே பல உயிர்களை இழந்துள்ளோம். ஆனாலும், தொலைநோக்குடன் கூடிய அரசியல் நகர்வின் மூலம் எமது இலக்கை அடைய பொறுமையின் எல்லையைத் தாண்டி இன்று எமது தேசியத் தலைவர் அமைதி காத்துக்கொண்டிருக்கிறார்.

தீர்மானங்கள் எடுத்து தீர்வைக் காணும் பொறுப்பு மக்கள் கைகளிலேயே உள்ளது - என்றார் செம்மணன்.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். நல்லூர் கோட்ட பொறுப்பாளர் பொஈஸ்வரன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

யாழ். - நல்லூர் கோட்ட மட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது. (ஒ-30)

### வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப் படக்காட்சித் தொடரில் உலகப் புகழ் பெற்ற நெறியாளர் புத்தாடெப் தாக்குப்தர் இன் 'உத்தர்' (மல்யுத்த வீரன்) என்னும் வங்காளப் படம் வீடியோக் காட்சியாக நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

---

# நல்லூர் ஆலயச் சூழலில் கிணறுகளுக்கு குளோரின்

## உணவகங்களிலும் திடீர்ச் சோதனை

யாழ்ப்பாணம்,ஓக.8

நல்லூர்க்கந்தன் ஆலயச் சுற்றாடலில் உள்ள வீட்டுக் கிணறுகள் மற்றும் பொதுக்கிணறுகளுக்கு யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினரால் 'குளோரின்' இடப்பட்டு வருகின்றது.

உற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் ஆலயக் கிணறுகள் மற்றும் விசேட குடிதண்ணீர்த் தாங்கிகளில் இருந்து மட்டுமன்றி ஆலய சுற்றாடலில் உள்ள வீட்டுக் கிணறுகளிலிருந்தும் குடிதண்ணீரைப் பெறுகின்றனர்.

இதனையடுத்து, ஆலயத்தை அண்டிய பகுதிகளிலுள்ள வீடுகளின் கிணறுகளுக்கும் குளோரின் இடப்படுவதாக மாநகரசபை சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி ஆலய சூழலில் இலையான்கள் மற்றும் கிருமிகள் பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்காக தெளிகருவிகள் மூலம் மருந்துகள் விசிறப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆலய சுற்றாடலில் உள்ள உணவகங்கள் மற்றும் ஐஸ்கிறீம் கடைகளுக்கு சுகாதார அதிகாரிகள் திடீர் விஜயம் செய்து வருகின்றனர்.

அங்கு சுகாதாரச் சீர்கேடான முறையில் உற்பத்தி, விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்கள், தின்பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டுவருகின்றன.

அத்துடன், உணவுப் பண்டங்களை சுத்தமான கண்ணாடிப் பெட்டிக்குள் மூடிவைத்தே விற்பனை செய்யவேண்டும் என்று வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

யாழ். மாநகரச்சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆஜீவநாதன் தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (எ-4)

---

# மண்கும்பான் அம்மன் ஆலயத்தின் எழுந்தருளி விக்கிரகம் திருட்டு!

## ஆடி அமாவாசையன்று பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.8

மண்கும்பான் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் எழுந்தருளி விக்கிரகம் பட்டப்பகலில் களவாடப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி, ஆடி அமாவாசை தினத்தன்று இந்தப் பகல் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

நண்பகல் 12மணிக்கு பூசையின் போது காணப்பட்ட விக்கிரகம் மாலை 6மணியளவில் வழிபடச் சென்றபோது அங்கு இருக்கவில்லை என்று அடியார்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்த எழுந்தருளி விக்கிரகம் இருந்த மண்டபத்துக்கு முன்பாக தேங்காய் உடைக்கப்பட்டிருந்தது. கற்பூரம் கொளுத்தப்பட்டிருந்தது. ஆனால், விக்கிரகத்தைக் காணவில்லை என்று வழிபடச்சென்ற பக்தர் ஒருவர் தெரிவித்தார்.

எழுந்தருளி விக்கிரகம் இருந்த மண்டபக் கதவின் பூட்டும் உடைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

ஐம்பொன்னால் செய்யப்பட்ட இந்த விக்கிரகம் சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்தது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடாபாக ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-4)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு

சந்தனமாதா கோவில் ஒழுங்கை, கொழும்புத்துறைப் பகுதியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: R.சவுந்தரநாயகம், இல. 12/21, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 021 - 222 6056 நேரில்வரவும். (21062)

### வீடு விற்பனைக்கு

யாழ்.கலாசாலை வீதி, திருநெல்வேலியில் 2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 581361, 0722118447. (சி-29314)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 78ஆம் ஆண்டு பிறந்த, பரணி முதலாம் பாதம் நட்சத்திர பெண்ணுக்கு கிரகபாவம் 48, உயரம் 5'6" லண்டன், சுவிஸ், கனடா பிரஜாவுரிமை பெற்றவராகவும் வந்து திருமணம் செய்து கூட்டிக்கொண்டு போகக் கூடிய மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: விளம்பர இல.1979, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (21163)

### தவறிவிட்டது

கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தையா ஜெயராணி என்பவருடைய தே.அ.அ.(இல. 755413739V), வி.அ.அ.,கைக்கடிகாரம், சிறுதொகைப் பணம் என்பன அடங்கிய கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி பஸ் நிலைய பரம்ஸ் கடையில் ஒப்படைத்துதவவும். (சி-29342)

### ENGLISH & SINHALA CLASSES

அடிப்படையில் இருந்து கிரமமான முறையில் வடிவமைக்கப்பட்ட பாட நெறிகள் மூலம் கற்பிக்கப்படும் (5ஆம் தரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், அரச/தனியார் நிறுவன ஊழியர்கள், பாடசாலை விலகியவர்கள் மற்றும் மொழி ஆர்வமுடையவர்கள் உட்பட) எவ்வயதினரும் தனியாகவோ சிறு குழுக்களாகவோ இணைந்து கொள்ளலாம். தொடர்பு T.Sagathevan, B.A. Lon, இல.46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (21167)

### சொற்பொழிவு

கொழும்புத்துறை,ஓக.8

நல்லூர் கந்தன் உற்சவத்தையொட்டி வட பிரதேச இந்துப்பேரவையினரால் நடத்தப்பட்டுவரும் உற்சவ கால தெய்வீக நிகழ்சிகள் நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் சிவத்திரு. மு.சிவலோகநாதன் 'சைவர்கள் சிந்திக்கவேண்டியவை' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஓ-30)

### ஓய்வூதியர்களுக்கு சிறப்பு ஏற்பாடு

தென்மராட்சிஓக.8

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெறுவோர் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் ஓய்வூதியர்களின் முகவரிகளுக்கு ஓய்வூதிய வவுச்சர்களை அனுப்ப தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஓய்வூதியர்களின் ஓகஸ்ட் மாத வவுச்சருடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ள விவரங்களைப் பூர்த்திசெய்து அதில் குறிப்பிட்டுள்ள தினத்தில் ஓய்வூதியரை நேரில் வந்து சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே சாவகச்சேரி மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் ஓய்வூதியர்களின் விவரம் பெறப்பட்டு அவர்களின் முகவரிக்கும் வவுச்சர் அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

---

கடற்றொழில், விவசாயம் போன்று

# பனைவளத் தொழில்களுக்கு உதவ அரசு முன்வர வேண்டும்!

## கொத்தணித் தலைவர் கோரிக்கை

வலிகாமம்தெற்கு, ஓக.8

கடற்றொழில் மற்றும் விவசாயத்துக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று பனைவளத்தைப் பயன்படுத்தும் தொழில்களுக்கும் உதவிகள் வழங்க அரசு முன்வரவேண்டும்.

வலிகாமம் பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது சங்கம் இலாபத்தில் இயங்கியது. அண்மைக்காலத்தில் அரசாங்கத்துக்கு கூடிய அளவு வரி செலுத்தவேண்டி இருப்பதாலும், தென்னிலங்கையில் இருந்து அதிக அளவில் சாராயம் இங்கு கொண்டு வரப்படுவதாலும் எமது சங்கம் நஷ்டமடைய நேரிட்டுள்ளது.


தென்னிலங்கை மது உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருள்களை இங்கு கொண்டுவந்து சந்தைப்படுத்துவதால் எமது உற்பத்திகளை விற்க முடியாத நிலையில் மாதாந்தம் ஐந்து அல்லது ஆறு லட்சம் ரூபா நஷ்டம் எமக்கு ஏற்படுகிறது.

வரிச்சலுகை அளித்து, தென்னிலங்கை உற்பத்தி வருகையைத் தடைசெய்தால் எமது உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித்து கூடிய இலாபத்தைப் பெறமுடியும்.

வடக்கு - கிழக்கில் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களுக்கு வழங்கப்படும் உதவிகள்போல பனைவளத்தை பயன்படுத்தும் தொழில்களுக்கும் உதவிகள் வழங்க அரசு முன்வர வேண்டும் - என சங்கத் தலைவர் க.மெய்யழகன் தெரிவித்தார். (ஓ-152)

---

## வெள்ளிவிழாக் காணும் தம்பதிகள்



**திரு.சபாபதி நற்குணம்**
**திருமதி நற்குணம் கிருஷ்ணலீலா**

தமது இல்லற வாழ்வில் இன்று 25ஆவது ஆண்டினைப் பூர்த்திசெய்யும் தம்பதிகளை உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

"கோம்பு"
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

*பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.*

(21139) (19-21-14-16)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 17 - 09 - 1948



உதிர்வு 09 - 07 - 2003

### திருமதி ருக்மணி அப்புத்துரை

இறைவன் திருவடி சேர்ந்து விட்ட எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மலர் வளையம், துண்டுப்பிரசுரம், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு எமது துக்கத்தில் பங்கு கொண்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை சனிக்கிழமை (09-08-2003) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'திருப்பதி'
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

**கணவர், பிள்ளைகள்.**

(21161) (21-19-14-16)

---

**We Serve**

### திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம் முச்சக்கர சைக்கிள் வண்டிகள் வழங்கும் வைபவம்

போரினால் பாதிப்புற்ற 13 வலது குறைந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் திரு.எ.வி. செல்வராசாவினால் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

காலம்: **08.08.2003 மாலை 3.00 மணி**
இடம்: **நாவலர் கலாசார மண்டபம்**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தலைவர்: லயன் என். ஜெயரட்ணம்
பிரதம விருந்தினர்
திரு.செ.பத்மநாதன்
*அரச அதிபர், யாழ்ப்பாணம்*
கௌர விருந்தினர்கள்
திரு.எ.வி.செல்வராசா தம்பதிகள்
லயன் எஸ்.எஸ்.தங்கராசா மாவட்ட இணைப்பாளர்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

லயன் என்.ஜெயரட்ணம் *தலைவர்.*
லயன் எஸ்.தனபாலசிங்கம் *செயலாளர்.*

(2115) (21-24-16-14)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 - 05 - 1944



இறைவன் அடியில் 09 - 07 - 2003

### சிவகுரு பரஞ்சோதி

(லண்டன், இளைப்பாறிய ஆசிரியர்)

திதிப்பா

**பார்போற்ற வாழ்ந்த பரஞ்சோதி வள்ளல்**
**சீர்பூத்த சிவநாமம் தனைக் கொண்டு**
**ஏர்பரந்த வளர்மதி ஏகாதசி திதி தனில்**
**ஈடிலாப் பேறடைந்தான் இனிதே!**

எமது குடும்பத் தலைவரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, தந்திமூலமும் நேரிலும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரிய பளை, பளை.

*மனைவி, பிள்ளைகள், சகோதரன்.*

*தற்காலிக முகவரி:*
31 4/2, Arethusa lane,
Wellawatte.

(சி-29329) (19)

---

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி குமாரசாமி

(கொக்குவில் மேற்கு)

கொக்குவில் மேற்கு, நீதிராஜா வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ச.சி. குமாரசாமி அவர்கள் நேற்று (07-08-2003) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும் தாவடி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராஜா (ஐயா), சின்னம்மா ஆகியோரின் சகோதரரும் திருமதி தங்கரத்தினம் (கனடா), பாலசுந்தரம் (கனடா), சண்முகநாதன் (மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்), குலசிங்கம் (ஜேர்மனி), சிவசுப்பிரமணியம் (கனடா), இன்பம் ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற சிங்கமாப்பாணர் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்) மற்றும் இரவீந்திரன் (இலங்கை வங்கி, மானிப்பாய்), இராசமலர் (கனடா), பத்மலோஜனி, விஜயலட்சுமி, சோபனா (கனடா) ஆகியோரின் மாமனாரும் இராஜ்மோகன் (கனடா), சதீஸ்மோகன் (கனடா), மதன்மோகன் (கணக்காளர், கொழும்பு),ரஞ்சித்மோகன் (கொழும்பு), நிருபா (கொழும்பு), பாலகுமாரன் (கனடா), ராஜகுமாரன் (கனடா), சசிகுமாரன் (கனடா), தர்ஷிகா, கௌஷிகன், துளசிகன், நிரோஷிகன், நிவேதனா, சுபகௌரி, சுபதர்ஷனா, சயந் (கனடா), அபிரா (கனடா),வரதராஜன் (கணக்காளர், கொழும்பு), கீதா (கனடா), சகிதா, மைதிலி (கனடா) ஆகியோரின் பேரனும் சனகன் (கனடா), வைசாலி (கொழும்பு), ஷியானி (கனடா) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07-08-2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையடி,
நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
**பிள்ளைகள்.**

(21161)(21-14-19-16)

---


## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

**அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க இம்மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.**

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்'. 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

எல்லா விதமான கடன் காட்டும் (Credit Card) ஏற்றுக்கொள்ளப்படும்.

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

*இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* **T.P.021-222 5542**

(C/29279)(21-14-16)

# நலங்கள் பல நல்கிடும் வரலக்ஷுமி விரதம்

**இன்று வரலக்ஷுமி விரத நன்னாள். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக விளங்கும் அன்னை ஆதி பராசக்தியானவள் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்குவதற்காகக் கொள்ளும் மூர்த்தங்களில் வரலக்ஷுமியாக விளங்கி அருள்பாலிக்கும் அருள் மூர்த்தம் மிகவும் விசேடமானது.

அத்தகைய வரலக்ஷுமியை வழிபடும் நாள் இன்றாகும். சைவப்பெருமக்களால் அனுட்டிக்கப்படும் சக்தி விரதங்களில் இன்று அனுட்டிக்கப்படும் வரலக்ஷுமி விரதம் மிகவும் விசேடமானது. இந்த விரதம் மிகவும் பவித்திரமானது. ஆவணி மாதப் பூரணைக்கு முதல்வரும் வெள்ளிக்கிழமையே விரதம் அனுட்டிப்பதற்கு உகந்த நாளாம். பெண் ஒருத்தியின் வாழ்வில் திருமாங்கல்யதாரணம் ஒரு முக்கியமான நிகழ்வு. அது நிறைவானவர்கள் அந்த வாழ்க்கை தொடர்ந்து நின்று நிலைக்க இந்த விரதம் மிகவும் உகந்ததாகும். தொட்டுத் தாலி கட்டிய கணவன் நீண்ட ஆயுளோடும், சகல ஐசுவர்யங்களோடும் வாழவேண்டுமென்று அம்பிகையை வேண்டி நோற்கும் விரதமும் இதுவாகும்.

### விரத வரலாறு

இந்த வரலக்ஷுமி விரதம் பற்றி கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு. திருக்கைலாய மலையிலே பார்வதியும் பரமேஸ்வரனும் வீற்றிருக்கின்றார்கள். அப்போது ஸ்ரீ பார்வதி தேவியானவள் பரமேஸ்வரனை மும்முறை வலம்வந்து வணங்கி, 'பரங்கருணைத் தடங்கலாகிய கருணாகர மூர்த்தியாக விளங்கும் பரம்பொருளாகிய எனது பிராண நாயகரே! இப்பரந்த நிலவுலகின் கண்ணே! சகல விதமான செல்வங்களையும் போகங்களையும் ஐசுவரியங்களையும் சௌபாக்கியங்களையும் நிகரில்லாத புத்திர சந்தானத்தையும் தரக்கூடிய மிகச் சிறந்த விரதம் எது என்று தேவரீர் எமக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்' என்று பணிந்து வினவி நின்றாள்.

அதைக் கேட்ட உலகத்துக்குக் கருத்தாவாக விளங்குகின்ற சிவபெருமான், 'தேவி! என் அருமைச் சக்தியாகத் திகழ்கின்ற நீ இன்று நன்று கேட்டனை. உலகம் உய்யும் பொருட்டு அந்த விரத மகிமை பற்றி எடுத்தியம்புகின்றேன் கேள்' என்று சொல்லத் தொடங்கினார்.

முன்னொரு காலத்திலே குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்றொரு பெண் வாழ்ந்து வந்தாள். அவள் மிகவும் புனிதமும் தூய்மையும் மிக்கவள். மிகுந்த தெய்வ பக்தியும் ஆசாரமும் மிகுந்தவள். தனது கணவன் மேல் அவள் உயிரையே வைத்திருந்தாள். கணவனே கண்கண்ட தெய்வம் என்றும், கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன் என்று வாழ்ந்து வரலாயினாள்.

## ஞானக்கதிர்

சுமங்கலிப் பெண்ணான அவள் கணவன் கீறிய கோட்டைத் தாண்ட மாட்டாள். அம்பிகையைத் தன் இதயத்திலே இருத்திப் பூஜித்து வந்தாள். ஒருநாள் அவள் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தவேளை ஒரு விசித்தரமான கனவு கண்டாள்.

அம்பிகையே கனவில் வந்து, தான் வரலசஷ்மி தேவி என்றும் தன்னை வழிபாடியற்றி உபவாசமிருக்குமாறும் பணித்து வரலசஷ்மி விரதம் அனுட்டிக்கும் முறைமையையும் எடுத்தியம்பினாள்.

உடனே விழித்தெழுந்த சாருமதி தான் கண்ட கனவு பற்றித் தன் தோழியருக்கு விவரமாகக் கூறினாள். அதைக் கேட்ட அவர்கள் அவள் கூறியவாறே விரதமிருந்து சகல சம்பத்துக்களையும் பெற்றுக் கொண்டனர்.

### விரதமிருக்கும் விதம்

முதலில் இடத்தைத் தூய்மையாக மெழுக வேண்டும். சாணகத்தால் தரையைப் பூசி மெழுகிய பின்பு மாவிலை, தோரணங்கட்டி மண்டபத்தின் நடுவே மேடை அமைத்து நெல் அல்லது அரிசி பரப்பி தாமரைக் கோலமிட்டு அதன்மேல் ஒரு கும்பம் வைத்தல்வேண்டும்.

எல்லாப் பூசை, விரத, மங்கல காரியங்களுக்கும் தண்ணீர் நிரப்பியே கும்பம் வைப்பது வழக்கம். நிறைகுடம் என்றால் நிறைவானது என்று பொருள். ஆனால், இந்த வரலக்ஷுமி விரதத்துக்கு மட்டும் கும்பம் நிறையப் பச்சையரிசி இட வேண்டும். நல்ல சுத்தமான தூய கழி நூலிலே மஞ்சளைப் பூசி ஒன்பது இழை உள்ளதாக முறுக்கி ஒன்பது முடிச்சுப் போட்டு அக்காப்பினைக் கும்பத்தின்மேல் வைத்து பூஜையை ஆரம்பிக்கலாம்.

### காப்பு நூல் கட்டும்முறை

முதலில் சங்கற்பம் செய்து புண்யாக வாசனம் முதலாய பூர்வாங்கக் கிரியைகளுடன் பூசை ஆரம்பமாகும். பின்பு விசேட உபசார பூஜை, அங்க பூஜை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுக்களையும் பூஜித்து, அதை வலது கையிலே கட்டிக் கொள்ளவேண்டும். பொதுவாக ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் நூல் கட்டுவதே முறைமை ஆகும். ஆனால், இந்த வரலக்ஷுமி விரதத்துக்கு மாத்திரமே வலது கையிலேயே பெண்கள் காப்பு நூல் கட்டவேண்டும். ஏனெனில், இந்த விரதம் கணவன் நீண்ட ஆயுளோடு க்ஷேமாகப் பல காலம் வாழவேண்டும் என அம்பிகையை வேண்டி அனுட்டிக்கப்படும் விரதமாகும்.


**ஸ்ரீ. நிதர்சன்**

காப்பு நூலில் போடப்படும் ஒன்பது முடிச்சுக்களுக்கும் ஒன்பது நாமங்கள் ஓதவேண்டும். கமலா, ரமா, லோகமாதா, விஸ்வஜனனீ, மகாலக்ஷுமி, க்ஷீராப்தி தனயா, விஸ்வசாக்ஷினி, சந்திரஸகோதரி, ஹரிவல்லபா என்பதே அந்த நாமங்கள் இதனை ஓதும்போது முன்னே ஓம் என்றும் பின்னே நம என்றும் சேர்த்தல் வேண்டும்.

இந்த விரதத்தின்போது அம்பிகைக்கு நெய்ச்சோறு படைத்தல் வேண்டும். வரலக்ஷுமி விரதத்துக்கு முக்கியமாகத் தேவை அறுகம்புல். இதனால், பிள்ளையாரை நினைத்து வணங்கி விரதம் ஆரம்பித்து பூர்த்தி செய்யவேண்டும். இந்த விரதம் ஒன்பது வருடங்கள் அனுட்டித்துப் பின்பு நிறுத்தலாம்.

ஆகவே, சைவப் பெருமக்களாகிய நாம் வரலக்ஷுமி விரதத்தை முறையாக அனுட்டித்து பூவுலகில் சுமங்கலிகளாக வாழ்ந்து சதுர்வித புருஷார்த்தங்களைப் பெற்றுய்வோமாக. ☆

# தெய்வீக ஸ்தலங்களில்



கல்வியங்காடு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் ஆலய ரத உற்சவத்தின்போது எடுக்கப்பட்ட படம். (ஒ-180)



வழக்கம்பரை முத்துமாரியம்பாள் ஆலய உற்சவ நாள்களில் சமயச் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் இரா.செல்வவடிவேலுக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.கைலாசநாதன் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-28)

## இடமாற்றங்கள் ரத்து

கொக்குவில்,ஓக.8

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் மற்றும் கணக்குப்பதியுநர் ஆகியோருக்கு அண்மையில் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என அரச அதிபர் அறிவித்துள்ளார். (எ-76)

## பதவி உயர்வு பரீட்சை

வலிகாமம் தெற்கு,ஓக.8

ஆரம்ப தரத்திலான வைத்திய உத்தியோகத்தர்கள், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் போன்றோரை தரம் இரண்டுக்கு உயர்த்துவதற்கான பரீட்சையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடத்துவதற்கு சுகாதார சேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இப்பரீட்சைக்கு ஆரம்பத்திலான வைத்திய உத்தியோகத்தர்கள், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் மட்டுமே தோற்றமுடியும்.

மும்மொழியிலும் நடத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்றுவதற்த விண்ணப்பிப்போரின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக.8

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டு வரும் 'தெய்வீக இசையரங்கு' நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் தாரணி, ரஞ்சன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக்காரர்களாக வயலின் - என்.பாக்கியலட்சுமி, மிருதங்கம் - எம்.லோகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (10)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

ஆறாம் திருவிழா



## எம்மைக் காத்தருள்வாய்!

எல்லோரும் புகழ்ந் தேத்தும்
பதியாம் தூய
நல்லூரில் எழுந் தருளி
அருள் பாலிக்கும்
சொல்லோடு பொருள் பொதிந்த
தமிழ் அளித்த
வல்லோனே! குகனே எம்மைக்
காத்தருள்வாய் தினமும் ஐயா!

- கவிமணி கந்த முருகேசனார்.

## மயில்மேல் வந்து இருள்போக்கு

அருள்கூட்டும் உன்பதத்தை அறிகின் றேன்நான்
ஆனாலும் அருகதைக்கு ஆகு வேனா,
பொருள்கூட்டும் படிக்குன்னை(ப்) புரிகின் றேனா
புண்யனே நல்லூரா புகலாய் உந்தன்
மருள்போக்கும் வேல்வந்தென் மாயை போக்க
மன்றாடி வேண்டுகிறேன் மயில்மேல் வந்து
இருள்போக்கி என்வினைகள் எகிறி விட்டு
எனக்கபயம் தந்தருளை எய்தச் செய்வாய்.

- முருகனடியான்.

## நாளும் நம்மைக் காத்திடுவான்

*நல்லூர்க் கந்தனை நம்புங்கள்*
*நாளும் நம்மைக் காத்திடுவான்*
*அல்லல் எல்லாம் போக்கிடுவான்*
*அன்னை யாக அணைத்திடுவான்*
*கொல்ல வந்திடும் பகைவரையும்*
*கூரிய வேலால் அழித்திடுவான்*
*எல்லை யில்லா அன்புடையான்*
*என்றும் துணையாய் வந்திடுவான்.*

- கவிஞர் வ.யோகானந்தசிவம்.

## வேலெடுத்து வினைதீர்ப்பாய்!

எடுப்பு

வேண்டும் வரந்தருவாய் முருகையா - எந்தன்
வேதனையைத் தீர்த்திட வேண்டும் வரந்தருவாய

தொடுப்பு

வண்ண மயிலேறி வருவாய் வேலையா - உந்தன்
வேலெடுத்து வினை தீர வேண்டும் வரந்தருவாய

முடிப்பு

எண்ணத்தில் நிலையாகும் எழில்வேலா - எங்கள்
மண்ணுக்கு மைந்தனான மால் மருகா முருகா!
விண்ணுக்குள் ஒளிதந்து வித்தாகும் சுடர் ஒளியே!
கண்களிலே கருணை கொண்டு காட்சி தருவாய் கதிர்வேலா!

- என்.பிறேமசீலன்.

## நல்வரம் அருள்வாய்!

நல்லூரில் வீற்றிருக்கும் கந்தனே!
நல்வேலை வணங்கிவந்தோம் முருகனே!
நல்லையில் அமர்ந்திருக்கும் அப்பனே!
நல்வரங்களை அருளுவாய் ஆறுமுகனே!

வீதிதனில் ஞானவலம் வந்தே
தேசமெங்கும் ஞானஒளி வீசவைப்பாயே!
வீதியெல்லாம் காவடிகள் வந்தே
நேர்த்திக்கடன் தீர்க்க இங்கே வருமே.

திருவீதி வலம்வந்து அடியழித்து
எம் தீராத வினையெல்லாம் அழித்திடுவோமே!
உன்னருள் பெறவேண்டவே தினமும்
உன்னடி வந்து வணங்குவோமே.

- கிருஷ்ணசாமி துளசிகரன்
*கொக்குவில் இந்துக்கல்லூரி.*

# காவலாளிகள் தேவை

அச்சுவேலி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை இரவு நேரத்தில் கண்காணிப்பதற்கு காவலாளிகள் தேவை. சுயவிவரங்களுடன் 10-08-2003 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு நேரில் சந்திக்கவும்.

தொடர்பு:- சூர்யா மருந்தகம்,
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

(C/29371) (18-13-29)



யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம்) இரண்டாம் வருட மாணவர்களுக்கான

## அவசர கலந்துரையாடல்

காலம்: 09.08.2003 சனிக்கிழமை
நேரம்: மு.ப. 11.00 மணி
இடம்: கல்வியியற்றுறை விரிவுரை மண்டபம்

முக்கிய விடயங்கள் குறித்து முடிவு எடுக்க வேண்டியிருப்பதால் அனைவரையும் அவசியம் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இரண்டாம் வருட மாணவர்
பிரதிநிதிகள்.

(சி-29369) (24-18-11-29)



## துயர் பகிர்கின்றோம்

யாழ்.மாவட்ட கமத்தொழில் காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்
**திரு.மா.ஆனந்தகுமாரசாமி**
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி ஐயாத்துரை இராஜலட்சுமி**

அவர்கள் 06.08.2003 புதன்கிழமை இயற்கை எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.
பணிப்பாளரும், பணியாளர்களும்,
கமத்தொழில் காப்புறுதிச் சபை, யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
கமநல சேவை நிலையம், நல்லூர்.

(C29370) (32-18-13-29)



# CONDOLENCE

We deeply Mourn the death
of our dear
PROFESSOR K.D.ARUDPIRAGASAM,
a member of the Board of Directors
of Jaffna College,
and Vice - Chairman of the University Grants Commission.

His Sudden death occured this Morning, Thursday 7th August, 2003 at his residence in Colombo. The Funeral Service will take place on Saturday 9th August, 2003 in Colombo.

Friends and relations please accept this intimation.

His passing away is a great, irreparable loss not only to Jaffna College, but to entire Sri Lanka, Specially to the University Communities around Sri Lanka.

***'Precious in the sight of the Lord is the death of his faithful Ones'***
(Ps.116:15)

Principal, Staff and Students
Jaffna College.

Vaddukoddai
Tel: 070 212531

Note: A Special assembly will be held at 10.00 a.m in the Ottley Hall on Saturday 9th August, 2003
Alumni, Parents and well wishers are invited

(C/29398) (16-18-29)


# முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.8

மானிப்பாய் கோவில்பற்று இந்து சமயவிருத்திச் சங்க பாலர் பாடசாலை விளையாட்டு விழா நாளை பி.ப. 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விருத்திச் சங்கத் தலைவர் செல்வி இ.சுப்பையாப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற உதவிக்கல்விப பணிப்பாளர் ஏ.வி.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை பி.ப. 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.(எ-10-100)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையினால் நடத்தப்பட்டுவரும் பாலர் கல்விச் சேவையின் விளையாட்டுவிழா நாளை பி.ப 2மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் கலந்துகொள்வார்.

★ ★ ★

சுன்னாகம், மயிலங்காடு ஸ்ரீமுருகன முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை பி.ப.1.30 மணிக்கு அ.கோகிலநாதன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி கலந்துகொள்வார். (எ-10-150)

★ ★ ★

உடுவில் கற்பொக்கணை கலைமதி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு இரா.அருள்நேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக்கோட்ட முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.8

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவும் 10ஆவது சமூகச்சுடர் கையெழுத்து சஞ்சிகை வெளியீடும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் தி. உதயசூரியன் தலைமையில் விக்கினேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி கலந்துகொள்வார்.

(எ-10)

## பத்திரிகையாளர் சங்கக்கூட்டம்

சண்டிலிப்பாய்,ஓக.8

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் சங்கத்தலைவர் செ.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஓ-135-173)

## விபுலானந்தர் முத்தமிழ் விழா

சண்டிலிப்பாய்,ஓக.8

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி தமிழ்மன்றம் நடத்தும் விபுலானந்தர் முத்தமிழ் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மன்றத் தலைவர் செல்வன் ப.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கலந்துகொள்வார்.

(ஓ-135)


# காணவில்லை



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் **சந்திரன் நிசாந்தன்** (வயது11) என்பவரைக் கடந்த 05.08.2003 செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை. இவரைப் பற்றித் தகவல் அறிந்தோர் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பகம்
657/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2721

(24-11-18-29) (சி-29365)



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்
**திருமதி ஸ்ரீ ஆனந்தகுமாரசுவாமி**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ஐயாத்துரை இராஜலெட்சுமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

(24-18-16-29)
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
(சி-29366)



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி விக்கினேஸ்வரி சடாச்சரம்**
அவர்களின் அன்புத் தந்தை
**புதியார் இராசையா**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.* - ஆசிரியர் கழகம்.
(சி-29366) (24-18-16-29)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31 - 12 - 1936



மறைவு 09 - 07 - 2003

**திருமதி சிவஞானம்மா ஐயம்பிள்ளை** (சிவம்)
(கச்சனாவலடி, சுன்னாகம்)

"நேற்றுவரை எம்முடன் கூட இருந்தீர்கள்
இன்று ஏனோ எம்மை தவிக்கவிட்டீர்கள்
எமக்காக நீங்கள் கண்ணீரில் கரைந்த நாள்கள்
எத்தனையோ
அந்நாள்களை நினைந்து நாங்கள் இன்று கண்ணீரில்
கரைகின்றோம்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆறுதல் சொல்ல எமக்கு நீங்களில்லையே"

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*கதிரமலைச் சிவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தாயாரின் திடீர்மறைவுச் செய்தி கேட்டு உடனிருந்து ஆறுதல் கூறியோருக்கும், உதவியோருக்கும் பலவழிகளிலும் எமக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கச்சனாவலடி,*
*சுன்னாகம்.* (21174) (24-11-18-29) - பிள்ளைகள்.



**HAIR STYLE**
**CAKE ICING**

புதிய பிரிவு
11-08-2003
Mon. 10a.m.
ஆரம்பமாகின்றன.

**தாரிகை**

[1] செங்குந்தாவீதி,
கல்வியங்காடு
[2] M.M.V.றோட்,
நெல்லியடி.

(21172) (26-18-16-29)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## செல்வி துஷாந்தி சிறீஸ்கந்தசெல்வன்

**(சட்டமாணி - L.L.B கொழும்பு பல்கலைக்கழகம்)**

கொழும்பு பல்கலைக்கழக "2003 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு" விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச கலாசார மண்டபத்தில் 04.08.2003இல் நடைபெற்ற பொழுது செல்வி துஷாந்தி சிறீஸ்கந்தசெல்வன் சட்ட மாணி (L.L.B University of Colombo) பட்டம் பெற்றதையிட்டும் இன்னும் பல பட்டங்கள் பெற்று மேன்மையுடன் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென மகிழ்ச்சியுடன் வாழ்த்துபவர்கள் அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள், அப்பம்மா மற்றும் குடும்பத்தினர்கள்.

59, செட்டித்தெரு,
நல்லூர் - யாழ்ப்பாணம்.(21185) (32-29-13-18)

தகவல்:
திரு. திருமதி சிறீஸ்கந்தசெல்வன்
பெற்றோர்.



# மரண அறிவித்தல்

## திருமதி ஜோதிகாமக்குருக்கள் சீதாலட்சுமிஅம்மா

பருத்தித்துறை சிவன்கோயில் முன்னாள் பிரதமகுரு ஜோதிகாமக்குருக்களின் மனைவி சீதாலட்சுமிஅம்மா நேற்று (07.08.2003) வியாழக்கிழமை கண்டியில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கண்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கா.இராதாகிருஷ்ணசர்மா,*
*45,கடைச்சாமி கோயில்வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (21173) (26-18-16-29)

தகவல்:
யோ. பத்மநாதக்குருக்கள் (மகன்)

# தொடர்புகொள்ள அழைப்பு

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு பின்வருவோர் கேட்டுகொள்ளப்பட்டுள்ளனர்.

திருமதி சிவராஜா பாலசரஸ்வதி நீதிவான் பங்களா அகதிகள் முகாம், மல்லாகம், திருமதி சுகுமாரன் பத்மாநிதி நீதிவான் பங்களா அகதிகள் முகாம், மல்லாகம், திருமதி தம்பிராஜா சரஸ்வதி, 4ஆம் வட்டாரம், புங்குடுதீவு, திருமதி கிருஷ்ணசாமி அன்புராணி, புலவர் அகதிகள் முகாம், மானிப்பாய். திருமதி தியாகு அகத்தம்மா, 8, பிள்ளையார் கோயிலடி, அரியாலை, யாழ்ப்பாணம், திருமதி பசுபதி மகேஸ்வரி, 33, செல்லர் ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நினைவு நாள்

மண்ணக வாழ்வில்
16 - 09 - 1918



விண்ணக வாழ்வில்
09 - 07 - 2003

## அமரர் தம்பாப்பிள்ளை செல்லையா

(முன்னாள் அம்மை அப்பா வெதுப்பக உரிமையாளர், விராங்கொடை, தெல்லிப்பழை)

அண்ணலே, எந்தன் பாசத்தால்
உந்தன் வாழ்வு துறந்தீர்
நிழல்போல் என்னருகில்
எப்போதும் துணை வந்தீர்
எம்மைத் தவிக்கவிட்டு இன்று
தன்னந்தனிவழியே போனதேனோ?

**எமைப்பிரிந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கின் ஆத்மா சாந்தியடைய அம்மனை வணங்குகின்றோம்.**

எமது இல்லத்தில் இன்றைய நாள் (08-08-2003) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் பகலுணவிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், போராளர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
*அன்புச் சகோதரி, இ. தவமணி மற்றும் சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

*தற்காலிக முகவரி:*
**அன்பு அச்சகம் அருகில், கிளிநொச்சி.**

(21138)(21-19-11)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







**உத்தியோகபூர்வ முடிவுகள்**
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2840880 இருந்து
2859213 வரை
சீட்டிழுப்பு இல. 1424
திகதி 06.08.2003

## வெற்றி எண்கள்

**13 19 34 46 52**

போனஸ் எண் **26**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.2,375,150/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,375,150/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 109 | 10,000/- | 1,090,000/- |
| 3 | 5,785 | 500/- | 2,892,500/- |
| 2 | 96,025 | 20/- | 1,920,500/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 13ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 118,075 | 10/- | 1,180,750/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,383,750/-

**இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா.3,289,900/-**

தொடர் இல. 3825433க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 09ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**2856172-5-02**
**2853481-4-59**
**2841098-0-96**
**2847299-5-25**
**2849135-4-44**


வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

பங்குகள் மூலம் மாற்றம்... விரைவில்



உங்கள் வெற்றிக்கு எங்கள் பங்களிப்பு

நன்மைகள் பற்றி அறிந்துகொள்ள அருகிலுள்ள செலான் வங்கிக்குச் செல்லுங்கள்

செலான் வங்கி

விரைவில்
வாக்குரிமையற்ற
சாதாரண
பங்குகளின்
வழங்கல்

# 'ரெலிகொம்' கட்டணங்கள் அதிகரிப்பும் சலுகை அறிமுகமும் நியாயமானதா?

**அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் கட்டணங்களை அதிகரித்துள்ளது. இந்தக் கட்டண அதிகரிப்பின்போது வாடிக்கையாளர்களுக்கு சில சலுகைகளை வழங்குவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஆராயும் 'திவயின' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு வெளியாகிறது.**

விஞ்ஞான உலகின் நட்சத்திரமாகத் திகழ்ந்த, (f) பிரீஸ் மோர்ஸ் என்னும் விஞ்ஞானியால், 1844ஆம் ஆண்டு மே மாதத்தில் மோசன் சமிக்கை எனப்படும் வெற்றிகரமான முறையொன்று உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு ஆரம்பமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் என்பவரால் கண்டறியப்பட்ட தொலைபேசியை விஞ்ஞான முன்னேற்றத்தின் மற்றொரு மைல் கல்லாகக் கொள்ளலாம்.

இன்றைய யுகத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்பான தொலைபேசி பல வகையான பரிமாணங்களுக்கு உட்பட்டு முன்னேற்றம் அடைந்துவருகிறது. ஊடகவியல்துறையில் உன்னத நிலையிலுள்ள பொருளாதார வளம் மிகுந்த நாடுகளில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மிக உயர்ந்த தரத்திலே உள்ளன. ஆயினும், இன்று எம்மைப் போன்று ஊடகத்துறை தொடர்பான வளர்ச்சி குறைந்த நாடுகளின் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மிகவும் பின்னடைந்த நிலையில் உள்ளன. இந்நிலையில்தான் எமது நாட்டில் ரெலிகொம் நிறுவனம் சுமார் 8லட்சத்து 40 ஆயிரம் தொலைபேசி இணைப்புக்களை வழங்கியதன் மூலம் முன்னிலை வகிக்கிறது.

அன்று ரெலிகொம் நிறுவனமானது, விசாலமான மூலவளத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள எமது தேசிய சொத்துக்களில் ஒன்றாக இருந்தது. ஆயினும், 1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொ.ஐ.மு. அரசினால் அத்தேசிய சொத்தின் நூற்றுக்கு 35 வீதமான பங்குகள் ஜப்பானிய "நிப்பொன் ரெலிகிரஸ்" மற்றும் ஜப்பானின் தொலைபேசிக் கூட்டுத்தாபனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதன்மூலமாக அரசின வரவு - செலவு திட்டத்தில் ஏற்பட்ட குறை நிரப்பை நிவர்த்தி செய்வதற்கான 225 லட்சம் அமெரிக்க டொலர்கள் கிடைத்தன. இவ் விற்பனையின பிரதிபலனாக ரெலிகொம் நிறுவனத்தின நிர்வாகம் ஜப்பானிய நிறுவனத்துக்குச் சொந்தமானதோடு, மேற்படி ஜப்பானிய நிறுவனத்தின் செயற்திட்டங்களுக்கு அமையவே இன்றைய ரெலிகொம் நிறுவனம் செயலாற்றி வருகின்றது. மேலும் இவ்விற்பனையின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க முதல் 5 வருடங்களுக்குள்ளாக 5 முறைகளிலான தொலைபேசிக்கட்டண உயர்வை நடைமுறைப்படுத்தும் அதிகார பலத்தை ஜப்பானிய நிறுவனம் தனதாக்கிக் கொண்டது.

இதன்படி நூற்றுக்கு 25 வீதமான முதலாவது மற்றும் இரண்டாவது கட்டண உயர்வுகளையும், நூற்றுக்கு 20 வீதமான மூன்றாவது கட்டண உயர்வையும், நூற்றுக்கு 15 வீதமான நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டண உயர்வுகளையும் அதிகரித்து இந்த ஐந்து சந்தர்ப்பங்களிலும் கட்டண உயர்வுகளை ஜப்பானிய நிறுவனம் பெற்றுள்ளதோடு, இதன் இறுதிக் கட்டண உயர்வு அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்படவுள்ளது.

மேலும் மிக நுட்பமான முறையிலேயே தொலைபேசிக்கட்டண அறவீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி தொலைபேசி அழைப்பொன்றை பெறாதவிடத்தும், இல்லங்களில் ரெலிகொம் நிறுவனத் தொலைபேசி நிறுவியதற்கான கட்டணமாக (வாடகையாகச்) செலுத்தப்பட்டு வந்துள்ள ரூபா240இற்குப் பதிலாக 594ரூபா அதாவது நூற்றுக்கு 135 சதவீத மேலதிகக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. அத்தோடு, வர்த்தக மற்றும் அலுவலக நிர்வாகம் சம்பந்தமான தொலைபேசி கட்டணமான ரூபா 540இற்குப் பதிலாக மறுசீரமைக்கப்பட்ட கட்டணம் ஆயிரத்து 500ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், விற்பனை ஒப்பந்தத்திற்கமைய நூற்றுக்கு 15 சதவீதமான கட்டண உயர்வை மாத்திரமே ரெலிகொம் நிறுவனம் மேற்கொள்ளமுடியும்.

மேலும் புதுமையான கட்டண உயர்வை மேற்கொண்டுள்ள வேளையில் இந்நிறுவனம் தொலைபேசி உரிமையாளருக்குப் பல சலுகைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. அவற்றுள், முதல் 200. அலகுகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட அழைப்புகளுக்கு குறைந்த கட்டணம அறவிடுதல் மற்றும் கழிவுடன் கூடிய ஒரு மணித்தியால நேர நீடிப்பு ஆகியனவற்றை முக்கியமாகக் கூறலாம்.

ஆயினும், நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதக் கட்டணமான 600ரூபாய்களை அறவிடவிருக்கும் அதேவேளை, 200 அலகுகளை இலவசமாக வழங்கி ஏமாற்றுவித்தையின்கீழ் உள்ள பயங்கரமான உண்மையை மறைக்கப்பார்க்கிறது ரெலிகொம்.

மேலும் இந்நிறுவனம் வேறு முக்கிய காரணிகளை முன்னிட்டே இக்கட்டணங்களை மறுசீரமைக்க முற்பட்டதாக இந்நிறுவனம் சார்பான சில தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதுவரை ரெலிகொம் நிறுவனத்துக்கு இலங்கையில் இருந்து வந்துள்ள ஏகபோக உரிமை பறிக்கப்பட்டதும் மற்றும் வெளிநாட்டுத் தொலைபேசிகளுக்கான கட்டணக்குறைப்பால், நாளாந்தம் ரெலிகொம் நிறுவனத்திற்குக் கிடைக்கவிருந்த பெருந்தொகைப்பணம் கைநழுவியதுமே கட்டண அதிகரிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

ஆயினும், இன்னமும் நாட்டில் சாதாரண தொலைபேசி சம்பந்தமான ஏகபோக உரிமையை ரெலிகொம் நிறுவனமே கொண்டுள்ளது. மேலும் இந்நிலையான தொலைபேசி இணைப்புக்களின் உரிமைபெற்ற வேறு நிறுவனங்கள், முக்கிய நகரங்கள் சிலவற்றையும் மற்றும் கொழும்பின் வர்த்தக நிலையங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள நாடளாவிய ரீதியில் விரிவடைந்துள்ள நிறுவனமாக ரெலிகொம் நிறுவனம் விளங்குகிறது. அந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை முடக்கமுடியாத நிலை நிலவுகிறது.

மேலும் வெளிநாட்டு தொலைபேசிக் கட்டண வீழ்ச்சியானது உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொதுவான ஒரு நிகழ்வாகும். இதனடிப்படையில் நோக்கும்போது இத்தர்க்கவாதம் இந்நிகழ்வுக்கு நூற்றுக்கு நூறு வீதம் பொருத்தமுடைய ஒன்றெனக் கருதமுடியாதுள்ளது.

மேலும் 1997ஆம் ஆண்டின் ரெலிகொம் நிறுவன விற்பனை இடம்பெற்ற வேளையில் இக் கொடுக்கல் வாங்கலினால் ரெலிகொம் வாடிக்கையாளர்களுக்கு இந்நிறுவனம் மூலமாக அதிக சலுகை, வசதிகள் கிடைக்கவுள்ளதாக அரசு சார்புச் செய்திகள் கூறியிருந்தன.

வீணே காத்திருக்காமல் உடனடியான தொடர்புகளைப் பெற்றுக்கொள்ளும் வசதி, சரியான அறவீட்டுச் சிட்டைகளைப் பெறும் வசதி மற்றும் தொலைபேசிச்சேவை செயலற்றுப் போகும் வேளைகளில் உடனடித் தொடர்பை பெற்றுக்கொடுக்கும் வசதி போன்றவைகள் முக்கியமானவைகளாக அப்போது விளம்பரப்படுத்தப்பட்டன. எனினும், ஒப்பந்தம் கைச்சாத்தாகி 6வருடங்கள் கடந்துள்ள போதும் குறிப்பிடப்பட்ட எந்தவொரு விடயத்திலும் முன்னேற்றம் காணப்படாதிருப்பது புதுமையாகவே உள்ளது. இன்றைய நிலையில் ரெலிகொம் நிறுவன தொலைபேசித் தொடர்புகளைப் பெற 3லட்சத்து 38 ஆயிரம் விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துக் காத்திருக்கின்றனர். இதேவேளை இந்நிறுவனத்தால் இதுவரையில், வருடத்திற்கு 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரையிலான புதிய தொடர்புகளையே வழங்கக் கூடியதாகவுள்ளது. இந்த வேகத்தில் இந்நிறுவனம் செயலாற்றுமானால் காத்திருக்கும் விண்ணப்பதாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 5½ வருட கால அவகாசம் தேவைப்படுமென்றால் இவ்வாறான செயற்பாட்டுக்கு ஜப்பானிய தொழில்நுட்பம் தேவைதானா? என்ற வினாவை எழுப்பாமல் இருக்கமுடியாதுதான். தொலைபேசித் தொடர்பொன்றினைப் பெறுவதற்காக 5 வருட காலங்கள் யாராலும் காத்திருக்க முடியுமா? எனவே, இது ஒரு மிகப்பாரதூரமான பலவீனமேயாகும்.

அடுத்ததாக சரியான கட்டண அறவீட்டுக்கான சிட்டை முறையை நோக்கலாம். 6 வருடங்கள் ஜப்பானிய நிர்வாகத்திற்குற்பட்ட 5 தடவைகள் கட்டண உயர்வு மேற்கொண்ட ரெலிகொம் நிறுவனத்தினால் அனுப்பப்படும் தொலைபேசிக் கட்டணப்பட்டியல் இன்னமும் மிகப் பழைமையான ஆரம்ப அடிப்படை உபவிதிகளின் படியே உள்ளது. இதனடிப்படையில் தவறாகக் கணிப்பிடப்பட்ட ஏராளமான பட்டியல்களை வாடிக்கையாளர்கள் பெற்றுள்ளனர். (இனிவரும் வருடங்களில் சரியான சிட்டைகளை நிறுவுமுகமாக இப்பிரிவை வேறு ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)

மேலும் தொலைபேசிகள் செயலற்றுப்போகும் தருணங்களில் நகர்ப்புற வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் உடனடி நிவாரண வசதிகளை இந்நிறுவனம் வழங்கிவருகிறது. ஆனால், கஷ்டப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் நிலைமை முன்னைய சோக நிலையிலே உள்ளது.



எனவே, குறுகிய அரசியல் இலாபங்களைக்கருதி, தேசிய சொத்துக்களை விற்றுத்தீர்க்கும் அரசாங்கங்கள் இந்த ரெலிகொம் நிறுவனத்தினை உதாரணமாகக்கொண்டு கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன. தனியார் துறையின் சொத்துக்கள் 'அலாவுதீனின் அற்புத விளக்குகளல்ல' என்பதை அரசு உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

மேலும், தொலைபேசிக்கட்டண உயர்வொன்றினை மேற்கொண்டாலும், ரெலிகொம் நிறுவனமானது இன்று வரை தனது இலாபகரமான வர்த்தக இலக்கை நோக்கியே நடைபயில்கிறது. ரெலிகொம் நிறுவனமானது சுமார் ஆயிரம் ஊழியர்களைத் தன்னகத்தே கொண்டு இலங்கையின் பிரபல்யம் வாய்ந்த இலாபகரமாக இயங்கும் ஒரு நிறுவனமாகவே உள்ளது.

அதேவேளை, மேற்குறிப்பிட்ட ஊழியர் தொகையானது தேவைக்கு அதிகமானதாகக் காணப்படுவதால், அவர்களைத் தம் சுயவிருப்பின் பேரிலான சேவை ஓய்வுபெறுவதற்கான திட்டத்தை அந்நிறுவனம் அறிமுகப்படுத்தவுள்ளது. இவ்வாறான பின்னணியில் இத்தகைய பெருமளவிலான கட்டண உயர்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது பொருத்தமானது தானா? என்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும் இன்னும் சொற்ப காலத்திற்குள்ளாக இம்முறை இலவசமாக வழங்கப்படவிருக்கும 200 அலகுகளுக்கான சலுகை நீக்கப்பட்டு அந்த அலகுகளுக்கு கட்டணம் அறவிட வாய்ப்புக்கள் உள்ளன என இவ்விடயத்தில் ஆர்வம் கொண்டுள்ள சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனால்; அது அவ்வாறு நடைபெறுமானால்மேலும் சிக்கலாகவே அமையும்.

இன்றைய காலகட்டத்தில் தொலைபேசியானது எமது வாழ்க்கையுடன் மிக நெருங்கிய தொடர்புள்ள ஒன்றாகவே உள்ளது. இந் நெருக்கத்தைக் காரணமாகக்கொண்டு தன்னிச்சையான வகையில் கட்டண உயர்வை மேற்கொள்ளும் செயற்பாடு தவிர்க்கப்படவேண்டும் அரசுகளும் அத்தகைய நிலைமைகளின்போது சரியான தீர்வொன்றைக் காணாமல், அதற்கான அனுமதி வழங்குவதை நிறுத்தவேண்டும் ஆயினும், நாளாந்தம் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

**~சரா~**

எனவே, அத்தகைய நிலைப்பாடுகளைத் தோல்வியடையச் செய்வதற்காக, ரெலிகொம் நிறுவன வாடிக்கையாளர்கள் அனைவரும் ஒருமுகமாக ஒன்றிணைதல் மூலமாகவே இந்த ஆரம்ப அடித்தளத்தினை அமைத்துக் கொள்ளமுடியும். அவ்வாறானதொரு நடவடிக்கையின் மூலமாகவே அரசுக்கும் அதேவேளை, நிறுவனத்திற்கும் பெரும் அழுத்தங்களைக் கொடுக்க முடியும். அல்லாதவிடத்து இத்தகைய செயல்முறை யதார்த்தங்களுக்கு நாம் முகங்கொடுத்தேயாக வேண்டும். ✦


## புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சு

## யாழ்ப்பாண நீர்ப்பராமரிப்பு, சுற்றாடல் முகாமைத்துவக் கருத்திட்டம்

**ஒப்பந்தகாரர் முன் தகைமை**

கீழ்க் குறிப்பிடப்படுகின்ற வேலைகளிற்கு தகைமைபெற்றுள்ள ஒப்பந்தகாரரைத் தேர்வு செய்வதற்காக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட துறைகளில் முன் அனுபவமும், தொடர்புடைய துறைக்குரிய உபகரணம், இயந்திரங்களை உடையோராயிருக்க வேண்டும்.

நீர்ப் பராமரிப்பு, சுற்றாடல் முகாமைத்துவக் கருத்திட்டங்களை யாழ்ப்பாணத்தில் நொறாட் (NORAD) நிதியுதவியினால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைகளுக்கே ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளன.

கருத்திட்டம் 1: சேதனப்பசளை தயாரிக்கும் பொறியும், யாழ்ப்பாணத்தில் திண்மக் கழிவுகளையகற்றல் முன்னோடித் திட்டமமைத்தல்.

கருத்திட்டம் 2: அராலி, அரியாலை தாம்போதி கதவுதாங்கி தூக்கிகள் அடங்கலாக வெள்ளுருக்குக் கதவுகள் வடிவமைத்தல், நிர்மாணித்தல்.

கருத்திட்டம் 3: GTZ நிறுவனத்தினரால் வழங்கப்படும் வரைபடங்களுக்கமைய யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மழைநீரைச் சேமித்து வைத்துக் கொள்ள நீர்த் தொட்டிகளை அமைத்தல்.

கருத்திட்டம் 4: யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட தூர்ந்துபோன குளங்களைப் புனரமைத்தல்.

**கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.**

1. நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு விவரம்.
2. நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இதையொத்த செயற்பாட்டு வேலை விவரம்.
3. வேலைத்திட்டம் சம்பந்தமான சொந்தமான உபகரணம், இயந்திரத் தொகுதிகளின் விவரம்.
4. நிறுவனத்தின் ஆளணி விவரம்
5. யாழ்ப்பாணத்திலுள்ள கிளை அலுவலகங்கள், முகவர்கள் இருப்பின் விவரம்.
6. கொழும்பு, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள்.

கருத்திட்டம் தொடர்பான விளக்கங்கள் மற்றும் மேலதிக விவரங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**யாழ்ப்பாணத்தில் நீர்ப்பராமரிப்பு, சுற்றாடல் முகாமைத்துவக் கருத்திட்டம்**
**3ஆம் மாடி, இலங்கை முதலீட்டுச்சபைக் கட்டடம்,**
**புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு,**
**இல:14, ஸ்ரீபாரொன் ஜயதிலக மாவத்தை,**
**கொழும்பு -01.**

*விண்ணப்பங்களை 20.08.2003 ஆம்திகதிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு விலாசமிட்டு அனுப்பவும்.*

அ. ஜெயரத்தினம்,
செயலாளர்,
புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு. (C/29359) (27-11-15)

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

நிகழும் மங்களம் பொங்கும் சுபாவு வருடம் ஆடிமாதம் 24ஆம் நாள் (09-08-2003) சனிக்கிழமை மு.ப. 11.00 மணி முதல் மதியம் 11.45 மணி வரை கூடிய சுபமுகூர்த்த வேளையில் நல்லூர் சட்டநாதர் கோயில் அருகில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில்

எமது கனிஷ்ட புத்திரி

**செல்வி சாகித்தியா**

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை வாழ்த்தி மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.எஸ்.ஜே.செல்லத்துரை
(கிராம சேவையாளர்)
திருமதி மங்களேஸ்வரி செல்லத்துரை
(திட்டமிடல் பகுதி - யாழ்.மாநகர சபை).

788 A. பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி, நல்லூர்.
யாழ்ப்பாணம், (21182) (32-19-13)

---

உ

ஓம் கணபதயே நமஹ

## குப்பிழான் கற்கரைக் கற்பகவிநாயகர் திருக்கோயில்

*(புனர்நிர்மாணஞ் செய்யப்பெற்ற)*

# சிற்பரத வெள்ளோட்ட விழா

மெய்யடியார்களே!

மேற்படி வெள்ளோட்டம் 2003.08.09 சனிக்கிழமை பகல் 11 மணியளவில் இணுவையூர் N.R.K.கோவிந்தசாமியின் புதல்வர் திரு. ரத்னகுமார் தலைமையிலான தென்னிந்திய நாதஸ்வரச் சக்கரவர்த்திகளின் நாதாஞ்சலி ஸகிதம் இடம்பெறவுள்ளது.

அனைவரும் வருக! திருவருள் பெறுக!

**நிகழ்ச்சிநிரல்**

தேவாரம்
ஆசியுரை - ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சி.குமாரராஜக் குருமணி
அருளாசியுரை - நல்லையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
தலைமையுரை - திரு க.சின்னராசா
*(பரிபாலன சபைத்தலைவர்)*
சிறப்புரை - சித்தாந்த ரத்தினம் சிவத்திரு க. கணேசலிங்கம்
*(உப தலைவர், உலக சைவப்பேரவை, லண்டன்)*

**திரு சு.இராசரத்தினம் ஆசாரியார்**
*(விநாயகர் சிற்பாலயம், திருநெல்வேலி)*
**அவர்களைப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல்**

நன்றியுரை

தர்மபரிபாலன சபையினரும்,
வெள்ளோட்ட உபயகாரர்களும்
(திரு பொ.ஜெகநாதன் குடும்பத்தினர்).

(21186) (29-13-18)

---

## PHYSICS

தனிப்பட்டமுறையிலும் குழு முறையிலும் பிரத்தியேகமான முறையில் வீடுகளில் கற்பிக்கப்படும்.

BY **Suresh**

(i) சம்பியன் லேன் (கயமுகன் கடை) கொக்குவில் கிழக்கு.
(ii) I.B.S சுண்டுக்குழி
T.P - 0777 - 032667.

(21187)

---

## லஷ்சுமி சினிமா
இணுவில்

அர்ஜுன், மனிஷாகொய்ராலா, வடிவேல், மணிவண்ணன் இன்னும் பலர் நடிப்பில்

**முதல்வன்**

பு.நேரம்: 11.00,3.00,7.00.

(21145) (31-14-17)

---

## நாகம்ஸ் சுன்னாகம்

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த

**பரசுராம்** (றீலஸ்)

தினசரி காட்சி : 11.00, 3.00,7.00 (பு.நே.)

(C29232) (31-14-17)

---

## நிறைஞ்சனாஸ்
சங்கானை

சாருகான், அஜித் நடித்த
**சாம்ராட் அசோகா**
(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**Red Scorpion**
தினசரி 8.45 இற்கு.

(C29213) (31-14-17)

---

## ராஜா யாழ்ப்பாணம்

14.08.2003 வரை
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு

மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி** (றீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,

(C/29233) (31-14-17)

---

## லிபேட்டி அச்சுவேலி



அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா, நக்மா மற்றும் பலர் நடித்த
**சிட்டிசன்** (றீலஸ்)
தினசரி: 3.00, 7.00 (பு.நேரம்)
இன்று முதல் காலை 11.00 **JUDGE & JURY**

(C/29373) (31-14-17)

---

Serendib Express
*Feel The Difference.............*

8 ஆம், 9ஆம், 10 ஆம் திகதிகளில் எமது செரண்டிப் விமான சேவை மேலதிக விசேட சேவைகளை மேற்கொள்ளவிருப்பதால் யாழ்.-கொழும்பு விமானப் பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளவும்.

| விமானம் புறப்படும் நேரம் | சமுகமளிக்கும் நேரம் |
|---|---|
| 102 - 8.30 a.m. | 6.00 a.m. |
| 104 - 12.00 p.m. | 9.00 a.m. |
| 106 - 16.30 p.m. | 2.00 p.m. |

தொடர்புகளுக்கு: 021-2223916, 0777 714871.

(சி-29375)(19-13)

13, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
செரண்டிப் விமானசேவை.

முகாமையாளர்,
யாழ்ப்பாணக்காரியாலயம்,

---

# இலவச கண் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
இன்றறக்ட் கழகத்தினால் நடத்தப்படும்

## இலவச கண் சிகிச்சை முகாம்

**காலம்:-** 09-08-2003 சனிக்கிழமை
10-08-2003 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:-** மு.ப. 10 மணி முதல் பி.ப. 4 மணி வரை
**இடம்:-** தம்பர் மண்டபம்
(யா/மத்திய கல்லூரி)
**பிரதம விருந்தினர்:-** Rtn.R.சுரேந்திரன்
(தலைவர், யாழ். றோட்டறிக் கழகம்)
**சிறப்பு விருந்தினர்:-** Rtn.P.P.A.பஞ்சலிங்கம்
(முன்னாள் தலைவர், யாழ்.றோட்டறிக் கழகம்)
திரு.க.இராசதுரை
(அதிபர் யாழ்.மத்திய கல்லூரி)

அனைவரையும் பங்குபற்றிப் பயனடையுமாறு அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. இன்றறக்ட் கழகம்.

(C/29376) (32-13-19)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்வி நிலையத்தின் ஆசிரியர்
**திரு.தங்கேஸ்**
அவர்களின் அன்புத் தந்தையார்
## அமரர் முருகன் கந்தன்
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
சறண்யா கல்வி நிலையம்,
ஏழாலை.

தகவல்:
கோணேஸ்.

(C/29377) (29-18-13)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியையும்
தற்போதைய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும்
பழைய மாணவர் சங்கப் பொருளாளரும் ஆகிய
**திருமதி ஸ்ரீ ஆனந்தகுமாரசுவாமி**
அவர்களின் அன்புத் தாயார்
## திருமதி ஐயாத்துரை இராஜலெட்சுமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

யாழ்ப்பாணம்.
(21191)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(29-13-18)

---

# தென்மராட்சி தெற்கில் விடுவிக்கப்பட்ட மறவன்புலோ வடபகுதி வயல் செய்கையாளர்களுக்கு!

மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவில் கேரதீவு - தனங்களப்பு வீதிக்கு வடக்கு 100 மீற்றர் உள்ளேயும், நுணாவில் கொல்லங்கிராய் வீதியில் இராணுவ அரணுக்கு 100 மீற்றர் உள்ளேயும், புகையிரதப் பாதையின் தெற்கே 100 மீற்றர் அரணுக்கு உள்ளேயும், கிழக்குப் பகுதியில் கீரைவாய்க்கால் வரையான நெல்வயல்கள் நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளதால், இப்பகுதியின் வயல் உரிமையாளர், செய்கையாளர்கள் தத்தமது கிராம அலுவலர் மூலமே, நேரடியாகவோ கைதடி கமநல நிலையத்தில் முழுப்பெயர், விலாசம், உரிமையாளரோ, செய்கையாளரோ, வயல் அளவும், பெயரும், தத்தமது அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களை 12.08.2003இற்கு முன்பதிவு செய்யவும். பதிவு செய்யப்படாத வயல்கள் இப்பகுதி மக்களிடம் செய்கை பண்ணக்கொடுக்கப்படும்.

K.சுந்தரேசன்
உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(C/29372) (32-13-18-29)

---

## கொழும்பு மேற்கு றோட்டறிக்கழகமும், யாழ்.றோட்டறிக்கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள

# கணவனை இழந்த பெண்களுக்கான சுயதொழிற் பட்டறை

கொழும்பு மேற்கு றோட்டறிக்கழகமும், யாழ்.றோட்டறிக்கழகமும் இணைந்து, சுயதொழில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளன.

யாழ்.குடாநாட்டிலுள்ள கணவனை இழந்த பெண்கள் சுயதொழில் மேற்கொள்வதை ஊக்குவிக்கவும், அதற்கு வேண்டிய உதவிகளை வழங்கும் நோக்குடனும் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலம் 11.08.2003 திங்கட்கிழமை காலை 09.30 மணி
இடம்: யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி

இந்தக் கருத்தரங்கிலும், பயிற்சிப்பட்டறையிலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப்பணிப்பாளர் **திருமதி ஐராணி பெர்னாண்டோ** அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

குறிப்பு: ஏற்கனவே வேறுவகைகளில் உதவிபெறும் பெண்கள் இதில் கலந்துகொள்ளத் தேவையில்லை.
கணவனை இழந்த அனைத்துப் பெண்களையும் இதில் கலந்து பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். றோட்டறிக்கழகம்.

**பட்டறையின் அனுசரணையாளர்**

**உதயன்**

---

# மரண அறிவித்தல்

திருமதி
## தவானந்தகுமரன் கிறேஸ் சரஸ்வதி (மணி)
(சங்குவேலி, மானிப்பாய்)

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவானந்தகுமரன் கிறேஸ் சரஸ்வதி 06.08.2003 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தவானந்தகுமரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-இராசமணி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற ஞானாம்பிகை செல்லத்துரை, விஜயரத்தினம் ஆறுமுகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற ஜெயதேவி (கனடா) மற்றும் இந்திராதேவி ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் சற்குணன் (கனடா), கிருபாமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கெற்சிசுதன் (கனடா), ரூபன் (கனடா), ஜூட் (கனடா), சுவீட்டி (கனடா), பியூட்டி (கனடா), ஜெபநிதி, ஜோயல், ஜூலியா, ஜெசிந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கோகுலன், அபிராமி, பேபி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (08.08.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடியிலுள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இந்திரா கிருபாமூர்த்தி
(மகள்)

*சங்குவேலி,*
*மானிப்பாய்.* (21190) (29-18-13)

# இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பான எதிரணியின் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை

## இறுதித் தீர்வுக்கான அடித்தளமே அது என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,ஓக.8

அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு தொடர்பான பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது. அவை யதார்த்தத்தைப் புரியாத எதிர்க்கட்சியினரின் பிதற்றல் என்கின்றார் அமைச்சர் பீரிஸ். நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதியும், எதிர்க்கட்சியினரும் பல சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளனர் எனவும் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் அரசாங்கம், புலிகளுக்கு இறுதிப் பெரும்பான்மை பிரதிநித்துவம் வழங்கியுள்ளது. இதனால், அங்கு வாழும் சிறுபான்மையினரான சிங்களவர்களும் முஸ்லிம்களும் பாதிக்கப்படுவர்.

இடைக்கால நிர்வாகம் என்பது புலிகளின் தனித் தமிழீழத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கான அத்திபாரமும் முதற்கட்ட நடவடிக்கையுமாகும்.

இனப்பிரச்சினை இறுதித் தீர்வுக்கான ஆலோசனைகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவில் இல்லை.

- இப்படி எதிர்க்கட்சியின் பேச்சாளர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இவை அனைத்துமே அர்த்தமற்றவை.

புலிகளுக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் என்பது புதிய விடயம் அல்ல. 1987ஆம் ஆண்டு, அன்றைய இந்தியத் தூதுவராக இருந்த டிக்ஷிட்டும் - பிரபாகரனும் நேரடியாகப் பேசி இணக்கம் கண்டவிடயம் அது.

இலங்கை - இந்திய உடன்படிக்கையிலும் அது தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்து, தனிநாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. கடந்த 2002 நவம்பர் மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சின் போது இதனைப் புலிகளே வெளிப்படையாக அறிவித்துவிட்டனர்.

மூன்றாவதாக, இனப்பிரச்சினை இறுதித் தீர்வுக்கான ஆலோசனைகள் எதுவும் இல்லை என்று கூறுவது வேடிக்கையானது. இறுதித் திர்வு காணப்பட்டுவிட்டால் இடைக்கால நிர்வாகம் என்பது அவசியமல்ல. இறுதித்தீர்வுக்கான அடித்தளமாகவே இடைக்கால நிர்வாகமுறை அவசியமாகின்றது. இதைப் புரிந்துகொள்ளாத இவர்களின் கூற்றுக்கள் இவர்களுடைய அரசியல் ஞானத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது.

விடுதலைப் புலிகள் அடுத்த வாரம் பாரிஸ் நகரில் தமது சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனைகளை நடத்துகின்றனர். அதன் பின்னர் அரசு முன்வைத்துள்ள ஆலோசனைகளை ஒப்பிட்டு அதற்கான மாற்று ஆலோசனைகளை முன்வைப்பர்.

அந்த ஆலோசனைகள் நோர்வே பிரதிநிதிகளின் மூலம் எமக்கு கிடைக்கும். அதன் பின்னர் இரு ஆலோசனைகள் தொடர்பாகவும் நேரடிப் பேச்சு நடத்தி இறுதி முடிவு காணப்படும்.

- இவ்வாறு அமைச்சர் சொன்னார்.

# இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் பங்களிப்பு அவசியம்

## ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய பின்னர் பிரதமர் தகவல்

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளுடன் பேச்சு நடத்தும் சமயம் முஸ்லிம் மக்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக முஸ்லிம் பிரதிநிதிகளையும் பேச்சுக்களில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று மாலை நாடாளுமன்றக் கடடத் தொகுதியில் ஆளும் கட்சி அமைச்சர்கள் முன் பேசும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கும் மத்தியஸ்தர்களான நோர்வேக்கும் அரசு அனுப்பிவைத்த வரைவு தொடர்பாகவும் நோர்வே புலிகளுக்கு அனுப்பிவைத்த வரைவு தொடர்பாகவும் நான் இன்று (வியாழக்கிழமை) காலை ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கமளித்தேன்.

இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பான புலிகளின் ஆலோசனைகள் அடங்கிய ஆவணம் எமக்குக் கிடைத்த பின்னர் இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும். இது விடயத்தில் வடக்கு-கிழக்கு சிங்கள மக்களினதும் பொதுசன ஐக்கிய முன்னணியினதும் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும்.

இந்தப் பேச்சுக்களின் போது மிக முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக நிச்சயம் பேசவேண்டிவரும் என்பது உறுதி. எனவே, இந்தச் சுற்று மிகவும் கடினமானதாக அமையும். இந்தப் பேச்சுக்களின் இறுதியிலேயே இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புத் தொடர்பாக இறுதியாகத் தீர்மானிக்க முடியும். அதுகுறித்து இப்போதே ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட முடியாது.

இந்த மாதிரியான - மிகவும் முக்கியமான - தீர்மானம் எடுக்கவேண்டிய சூழ்நிலையில் ஏற்படும் ஒரு சிறு தவறின் மூலம் எமது முழு முயற்சிகளுமே நாசமாகிப்போகும் நிலை ஏற்படலாம். சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய - நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களுக்கு அமைவான - முஸ்லிம்கள் மற்றும் வடக்கு-கிழக்கு சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் புலிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதே அரசினது எதிர்பார்ப்பாகும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

(ம-5-6)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஓக.8

நல்லூர்கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையினால் நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரையும் தினமும் மாலை 6 மணிக்கு தெய்வீக நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளில் திருமுறை ஓதுதல், இடர் களை பதிகம், கோளறு பதிகம் ஓதுதல், சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன.

நேற்று இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின. இன்று மாலை 6 மணிக்கு சைவர்கள் சிந்திக்க வேண்டியவை எனும் தலைப்பில் மு.சிவலோகநாதன் சொற்பொழிவாற்றுவார்.

(எ-10)

## நேற்றும் சுன்னாகத்தில் மிதிவெடி வெடித்து குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.8

கிணறு வெட்டுவதற்காக மண்ணைக் கொத்தியபோது மண்வெட்டி மோதி மிதிவெடி வெடித்ததில் தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்தார்.

சுன்னாகம் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தெல்லிப்பழை கிழக்கு சிற்றியம் புளியடியைச் சேர்ந்த கந்தன் கந்தசாமி (வயது 48) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார்.

கடந்த இரு தினங்களில் குடாநாட்டில் இடம்பெற்ற இரண்டாவது மிதிவெடிச் சம்பவம் இதுவாகும்.

(ம-5-6)

## ஆவணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்கி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கையளிப்பதற்காக அனுசரணையாளரால் ஆவணமொன்று தயாரிக்கப்பட்டது. அரசாங்கத்தால் அனுசரணையாளருக்கு வழங்கப்பட்ட முன்மொழிவுகளின் சாரத்துக்கு எவ்வகையிலும் வேறுபடாத மேற்படி ஆவணம் எமது அங்கீகாரத்துடன் அனுசரணையாளினால் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருக்கையில் ஜனாதிபதிக்கு பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வெளியிடப்பட்ட கருத்துக்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல. தங்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் நடைபெற்ற கடிதப் பரிமாற்றங்கள் தங்களால் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தமையினால் இவ்விடயத்திலும் இரகசியத் தன்மை பேணப்படவேண்டுமென நான் நம்பினேன்.

ஏதேனும், ஒரு விடயம் தொடர்பாகத் தங்களுக்குத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை இருந்திருப்பின் அவ்விடயம் தொடர்பாக நேரடியாக எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் அதுபற்றி விளக்கமளித்திருக்க முடியும். அதன்பின் அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டுமென தாங்கள் கருதியிருந்தால் குறைந்த பட்சம் அது பற்றி எனக்கு அறிவித்திருக்க வேண்டும்.

பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் அது பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே கலந்தாலோசிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்குப் பதிலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்க தாங்கள் நடவடிக்கை எடுத்ததுடன், அதனைப் பகிரங்கப்படுத்துவதற்கும், இதுதொடர்பாக செய்தியாளர் மாநாடொன்றை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றுக்கெல்லாம் பின்னர் இதுபற்றி அரசாங்கத்தின் பிரதான சமரசப் பேச்சாளரால விளக்கமளிக்கப்பட்டது. அப்படியிருந்தும் தங்களுக்குப் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து எனக்குக் கடிதம் அனுப்பியுள்ளீர்கள்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகமொன்றுக்கான ஏற்றுக்கொள்ளக் கூடிய முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டபின், நிச்சயமாக அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த முன்மொழிவுகள் தொடர்பாக மிக விரைவில் தங்களுடன் பேச்சு நடத்த சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

- இப்படிப் பிரதமர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

(ம-5)

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருந்த வேளை பெரும் எண்ணிக்கையிலான இந்திய ட்ரோலர்கள அப்பகுதிக்கு வந்து மீன் பிடிக்க ஆரம்பித்துள்ளன. இதனால் தாம் தொடர்ந்து தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து கரைதிரும்பிவிட்டதாக இன்பருட்டி மீனவர்கள் தெரிவித்தனர்.

தாம் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது குறித்துக் கோப முற்றிருந்த மீனவர்கள், பருத்தித்துறை முனைப் பகுதியில் கரைக்கு மிக அண்மையாகத் தொழிலில் ஈடுபட்ட இரு ட்ரோலர்களை இரவு 10.30 மணியளவில் மடக்கினர். அதிலிருந்த 10 மீனவர்களையும் கரைக்குக் கொண்டு வந்தனர். 'கவிதா', 'லீலாவதி' ஆகிய அவர்களது படகுகளும் கரைக்கு இழுத்து வரப்பட்டன.

இந்திய மீனவர்கள் பிடித்து வரப்பட்ட விடயம் இராணுவத்துக்கு தெரியவந்ததும் அப்பகுதிக்கு பெருமளவு இராணுவத்தினரும் பொலீஸாரும் வரவழைக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இந்திய மீனவர்களைப் பிடித்து வைத்திருப்பது சட்டவிரோதமானது என்பதனால் அவர்களைத் தம்மிடம் ஒப்படைத்து விடும்படி இன்பருட்டி மீனவர்களிடம் பொலீஸார் கோரிக்கை விடுத்தனர். ஆனால், இந்திய மீனவர்களை பொலீஸாரிடம் ஒப்படைக்கத் தாம் தயாரில்லை என்று மீனவர்கள் தெரிவித்துவிட்டனர்.

விடயம் பரவியதும் அங்கு கடற்படை அதிகாரிகளும் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளும் வந்து சேர்ந்தனர். இந்த விடயத்தில் தலையிடுவதற்குத் தமக்கு அதிகாரம் இல்லை. எனினும், ஓர் இணக்கப்பாட்டுக்கு வருமாறு கண்காணிப்புக் குழுவினர் மீனவர்களிடமும் படை அதிகாரிகளிடமும் கேட்டுக்கொண்டனர்.

எனினும், இந்திய மீனவர்களை ஒப்படைக்க வடமராட்சி மீனவர்கள் மறுத்து விட்டனர். நள்ளிரவு வரை இந்த இழுபறி தொடர்ந்தது. இறுதியில் இந்திய மீனவர்களை பொறுப்பான ஒருவரின் பாதுகாப்பில் வைப்பதற்கு இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர். அதன்படி அப்பகுதி கிராம அலுவலர் எஸ்.ஜெயபவானந்தமலையின் பாதுகாப்பில் இந்திய மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கான உணவு, உடை என்பன வடமராட்சி மீனவர்களால் வழங்கப்பட்டன.

நேற்றுக்காலை மீண்டும் இந்திய மீனவர் தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 524ஆவது படைப்பிரிவு பிரிகேடியர் தலாகா கொட, கடற்படை அதிகாரி றொகான், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஏ.சிவசுவாமி, கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி ஆகியோர் இன்பருட்டியில் கூடி மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசினர்.

அந்தப் பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் இந்திய மீனவர்கள் நேற்றுப் பகல் 11.00 மணியளவில் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஆனாலும், இந்திய மீனவர்கள் வந்த இரு ட்ரோலர் படகுகளையும் பொலீஸாரிடம் கையளிக்க வடமராட்சி மீனவர்கள் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். இந்திய மீனவர்களின் அதது மீறல்கள் தொடர்பாக சரியான ஒரு தீர்வுகிடைத்தால் மட்டுமே படகுகளை ஒப்படைக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இறுதியில், கடற்படையினரின் மேற்பார்வையின் கீழ் இரு படகுகளையும் பருத்தித்துறை மீனவர்களின் பாதுகாப்பில்விட முடிவுசெய்யப்பட்டது.

சந்திப்பில் கலந்து கொண்ட 524 ஆவது படையணியின் பிரிகேடியர் தலாகா கொட, இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இலங்கைக் கடற்படை, இந்தியத் தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு வடமராட்சி மீனவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

இந்த உறுதிமொழியை அடுத்தே இந்திய மீனவர்கள் அதிகாரிகள் முன்னிலையில் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-5-6-8-173-70-31)

## உயர்தரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொள்ளும் வகையில் நாளை சனிக்கிழமையானபோதும் பாடசாலை அதிபர்கள் கடமையாற்றுவார்கள் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளின் பெறுபேறுகள் திங்கட்கிழமை கையளிக்கப்படும்.

பெறுபேறுகள் அனைத்தும் உடனடியாகவே இணையத் தளத்தில் வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(ம-5-6)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்கள் உரிய காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது. வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகமொன்றை ஏற்படுத்துவதற்கு வகைசெய்யும் யோசனையை இலங்கை அரசு கடந்த ஜூலை 17 ஆம் திகதி புலிகளுக்கு வழங்கியிருந்தது. அதனைப் புலிகள் இன்னும் மீளாய்வு செய்கின்றனர். ஆக்கபூர்வமாகவும், சமரச விருப்புடனும் முயற்சிகளை மேற்கொண்டால் பேச்சு மூலமான ஒரு தீர்வு கிடைப்பது சாத்தியமானது.

இதுவரை புலிகளின் அரசியல் எதிரிகள் எனப்படுவோரும், புலிகளுக்கெதிரான தகவல் கொடுப்போருமாக மூன்று டசின் பேர்களுக்குமதிகமானவர்கள் இலங்கையில் இவ்வருடத்தினுள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். புலிகள் வைத்திருக்கும் முகாம், 2002 பெப்ரவரியில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்த மீறலாகும் என்று கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5-6)

## ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்போது பிரதமர் உறுதியளித்தார்.

இந்த மாத முடிவுக்குள், இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது கருத்துக்களை புலிகள் தெரிவிப்பார்கள் என்று தான் நம்புவதாகவும் பிரதமர் சொன்னார்.

இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பாக புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்ட வரைவுகளில் வேறுபாடுகள் காணப்படுவதாகச் சொல்லப்படுவது குறித்தும் பிரதமர் ஜனாதிபதிக்கு நேரில் விளக்கியதாக ஜனாதிபதி மாளிகைச் செய்தி தெரிவித்தது.

இந்தச் சந்திப்பு முன்னர் நடைபெறுவதாக இருந்தது. எனினும் அது பிற்போடப்பட்டது. பிரதமரைச் சந்தித்து இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகப் பேசிய பின்னரே அது குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளதாகத் தெரிவித்து கடந்த 5ஆம் திகதி நாட்டு மக்களுக்கு ஆற்ற இருந்த உரையையும் ஜனாதிபதி பிற்போட்டிருந்தார்.

இந்த நிலையில், பிரதமர் சீனாவுக்குப் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக இந்தச் சந்திப்பு திடீரென இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது பாதிப்புக்குள்ளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு வழங்கப்படாதமை குறித்து ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாகக் கூறப்பட்டது.

(ம-5-6)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

அருண்பாண்டியனின்

**விகடன்**

(பிரதிகள் உடன் பெறலாம்)

விஸ்ணு வீடியோ
கோண்டாவில்

(C-29379) (12)

**NEW SCIENCE COLLEGE JAFFNA**

2005 A/L

அலைகளும் அதிர்வுகளும்
Mon,Fri.6.00 - 7.00(a.m.)
ஆரம்பம் 11.08.2003

2004 A/L

காந்தப்புலம்
Wed.,Fri.6.00 - 7.00(p.m.)
ஆரம்பம் 12.08.2003


BY:M.கருணாநிதி

(21156)(12)



**தென்னிந்தியாவில் இருந்து**

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



**ராஜகுருசாமி**

அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

கைரேகை மட்டும் 9 மணிமுதல் 2 மணிவரை.

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

காலை 9.00மணிமுதல் மாலை 6.00மணி வரை.

(24-15-19) ராஜகுருசாமி T.P. 5867

மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்

60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.

(21180)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.